பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 05 ஞாயிற்றுக்கிழமை (19-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:54

## ஜனாதிபதி - மகேஸ்வரன் நேற்று முக்கிய பேச்சு!

### அடுத்த வாரமும் சந்திப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு.ஜன.19

இந்து சமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முக்கிய பேச்சு நடத்தியிருக்கிறார்.

ஜனாதிபதியின் ஏற்பாட்டில் - ஜனாதிபதி மாளிகையில் - நேற்று நடந்த பொங்கல் விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் மகேஸ்வரன், பின்னர் ஜனாதிபதியுடன் தனியாக சுமார் அரை மணிநேரம் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சின்போது அமைச்சர் மகேஸ்வரன் வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தார் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.


வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் மீள் குடியமர்வு, குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களின் குடியமர்வு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்க் கைதிகளின் விடுதலை, வடபகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனவர்களின் கதி, தமிழ் இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு, தமிழ் மக்களின் பாரம்பரியம், கலை கலாசாரம் என்பவற்றைப் பேண எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன தொடர்பாக மகேஸ்வரன் ஜனாதிபதியுடன் பேசினார்.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்ட பின்னரும் தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற இராணுவ அழுத்தங்கள் தொடர்பாகவும் அமைச்சர் ஜனாதிபதிக்கு விளக்கினார்.

அமைச்சர் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக சாத்தியமான பல நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்தார் என்று இந்து கலாசார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் பற்றி தொடர்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மாளிகையில் நடந்த பொங்கல் விழாவின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அமைச்சர் மகேஸ்வரனும் முக்கியமாகக் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# சமாதான முயற்சியில் வெளிநாடுகளின் பங்களிப்புக்கு வரையறை வேண்டும்

## ஜப்பானின் விசேட தூதரிடம் இந்தியா திடமாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஜனவரி19

**இலங்கையில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் வெளிநாடுகளின் பங்களிப்புக்கு ஒரு வரையறை இருக்கிறது. அந்த வரையறையை மீறி எந்த ஒரு நாடும் செயற்படுவதை இந்தியா விரும்பவில்லை.**

**அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் வெளிநாடுகளின் பங்களிப்புக் குறித்து இந்தியா மிக உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது.**

**ஜப்பானின் விசேட தூதுவர் ஜசுகி அகாஷியிடம் இந்தியா இந்த விடயத்தைத் திடமாகத் தெரிவித்துள்ளது.**

தூதுவர் ஜசுகி அகாஷி அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது இலங்கை விடயத்தில் ஜப்பானின் தலையீடு பற்றிய தனது கவலையையும் இந்தியா அவரிடம் தெரிவித்தது.

ஜசுகி அகாஷி கடந்த வியாழனன்று இலங்கை வந்தார். அன்றைய தினம் வன்னியில் இடம்பெற்ற 'சிறான்' கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார். அவர் இலங்கை வரும் வழியில் இந்தியாவுக்குச் சென்று நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்தேஷ் மிஷ்ரா மற்றும் வெளிவிவகாரச் செயலர் கன்பல் சிபல் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அப்போது, இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஜப்பான் அதிகமாகத் தலையிடுவது தமக்கு கவலையளிக்கிறது என்றும் -

இலங்கைககு உதவியளிக்கும் பணியுடன் மட்டும் ஜப்பான் நின்று கொள்வதே சிறந்தது என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதர் வன்னியில் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

கிளிநொச்சி,ஜன.19

பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் எவான்ஸ் தலைமையிலான குழு ஒன்று நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேச்சு சுமார் 2 மணி நேரம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் எவான்ஸ் பிரிட்டனின் தெற்காசியத் திணைக்கள மற்றும் பொதுநலவாய அலுவலகத்தைச் சேர்ந்த ஸ்ரீபன் ஸ்மித், இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரக முதன்மைச் செயலர் டெனி நொக், தூதரக மூன்றாவது செயலர் குவாலின் இக்ஷ், திட்டமிடல் அதிகாரி கமிலா நோக்கன் ஆகியோர் பிரிட்டிஷ் குழுவில் அடங்கியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள், 'சிறான்' அலுவலகத்தின் பணி

(16ஆம் பக்கம் பார்க்க)

## குருகுலக் கலாசாலையை நாளை எதிர்க்கட்சித் தலைவர் திறக்கிறார்

### இந்து கலாசார அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்நகரில் - ஆனைப்பந்திப் பகுதியில் - இந்து கலாசார அமைச்சினால் நிறுவப்பட்டிருக்கும் வேதாகம குருகுல கலாசாலை நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குருகுல கலாசாலையை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

அன்று காலை 10மணிக்கு திறப்பு விழா வைபவம் கோலாகலமாக நடைபெறவுள்ளது. சுமார் 50லட்சம் ரூபா செலவில் இந்தக் குருகுலக் கலாசாலை நிறுவப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக இந்து விவகார அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. யாழ்ப்பாணத்தில் பயிற்றுவிப்பதற்கான இக்குருகுலம் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியினால் உருவாக்கப்பட்டு வருகிறது. இக்குருகுலம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக மரபுகளை பேணுவதில் விடுதலைப் புலிகள் திடசங்கற்பம்

### ஜப்பானிய விசேட தூதுவர் கூறுகிறார்



கொழும்பு.ஜன.19

சமாதானத்தைக் கட்டியெழுப்ப முயலும் இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவை ஜப்பான் அரசு வழங்கும். ஜனநாயக மரபுகளை பேணிக் காப்பதில் விடுதலைப் புலிகள் திடசங்கற்பம் கொண்டுள்ளனர். அவர்களின் இந்த நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இருக்காது என நான் நம்புகிறேன்.

நேற்று மாலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற, பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய ஜப்பான் அரசின் விசேட தூதுவர் ஜசுகி அகாஷி இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான ஜப்பான் உயர்ஸ் தானிகர் ஒட்சுகா, ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் தென்மேற்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் பாக்திரியா

(16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்க்கட்சிக் குழு நாளை வரும்

கொழும்பு,ஜன.19

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

குடாநாட்டில் உள்ள நிலைமைகளை நேரில் மதிப்பிடுவதற்காக இக்குழுவினர் இங்கு வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவருடன் முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, சசில் பிரேம ஜயந்த, பாரத லஷ்மன் பெரேரா, அனுர பிரியதர்சன யாப்பா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர்களுடன் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வருகை தருகின்றனர்.

இவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களின் அவலங்கள், பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்துவர்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கும் குழுவினர் செல்வர் என்று

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தலா 1000 ரூபா வங்கியில் வைப்பு

## அபிவிருத்தி லொத்தர் சபை ஏற்பாடு

கொழும்பு,ஜன.19

நாடுமுழுவதும் இன்று பிறக்கும் குழந்தைகளில் முதலில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் அவற்றின் பெயரில் வைப்பிலிடப்படவுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையே இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சபையின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் இன்று குழந்தைகள் பிறக்கும் நேரம் பதிவு செய்யப்படும். அதன் அடிப்படையில் முதலில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் பெயரில் தலா ஆயிரம் ரூபா சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்படும்.

இதற்கான சுற்றறிக்கை ஒன்று சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் சகல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. யாழ்போதன வைத்தியசாலைக்கும் அதன் பிரதியொன்று அனுப்பப்பட்டுள்ளது.

(ம-15-139)

# யாழ்.போதனா வைத்தியசாலை குறைபாடுகள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் மற்றும் வைத்தியசாலை புனர்நிர்மாணம் தொடர்பாக ஆராயும் பொருட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் கலந் துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சுகாதார மற்றும் போசாக்கு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.றெஜி பெரேரா தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் மற்றும் தேவைகள் பற்றி சுகாதார அமைச்சின் செயலாளரிடம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சுகாதார சேவைகள் அமைச்சின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் டாக்டர் வி.ஜெகநாதன், மலேரியா தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் பி.டெர்னாண்டோ மற்றும் வைத்திய நிபுணர்களான டாக்டர் எஸ்.குகதாசன், டாக்டர் ஜி.பவானி, டாக்டர் பேரானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-8-139)

# பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் மாகாணப் பணிமனை நேற்று காலை 8.30 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரிக்கு முன்பாக புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது. சுகாதார மற்றும் போசாக்கு நலனோம்பு அமைச்சின் செயலாளர் எம்.ஏ.எஸ். றெஜி பெரேரா இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். அலுவலகத்தின் பெயர்ப் பலகையை யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் கலாநிதி க. குணராசா திரைநீக்கம் செய்துவைத்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுகாதார சேவைகள் அமைச்சின் வடக்குக் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எஸ். ஜெகநாதன் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள், மதப் பெரியார்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(எ-8-86)



பிராந்திய ஆணையாளர் க.குணராசா பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதையும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். *(படம்:தேவராஜ்)*

# முதலாவது சமுர்த்தி வங்கி மருதங்கேணியில் திறப்பு

வடமராட்சி கிழக்கு,ஜன.19

யாழ்.மாவட்டத்தின் முதலாவது சமுர்த்தி அபிவிருத்தி வங்கி நேற்று மருதங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவம் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ தேசியக்கொடியினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். வங்கியின் பெயர்ப்பலகையை வடக்கு - கிழக்கு மாகாண சமுர்த்தி ஆணையாளர் எஸ்.நடேசராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன் நாடாவை வெட்டி பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தில் பிரதி சமுர்த்தி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரமும் கலந்துகொண்டார்.

(மரி-182)

# காணாமற் போனோர் பற்றி மீண்டும் இங்கு விசாரணை

யாழ்ப்பாணம்,ஜன.19

1996ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மீண்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே கீழ்க்காணும் பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ள காணாமல் போனவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களை யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

ஏ.ஏ.அருணகிரிநாதன் (சாவகச்சேரி), அலோசியஸ் லக்ஸ்மன் (முதலாம் குறுக்குத்தெரு, யாழ்.), அந்தோனிப்பிள்ளை மருசலீன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), அந்தோனிப்பிள்ளை குவின்டன் ராஜ்குமார் (குருநகர்), அன்ரன் யோசப் நவக்கிரி (புத்தூர்) -

அன்ரன் ஜூட் பாக்கியநாதன் (3ஆம் குறுக்கு வீதி, பாசையூர்), அப்பையா கேதாரநௌரி (கைதடி), அருளாநந்தன செல்வகுமார் (புதிய குடியிருப்பு, அராலி).

ஆறுமுகம் ரவி (அரியாலை), அருணாசலம் புஸ்பதாஸ் (ஒட்டுவாவி மிருசுவில்) -

அருந்தவராஜா பாலசுப்பிரமணியம் (நவாலி வடக்கு), பாலரட்ணம் ஜெயமோகன் (ஜின்னாவீதி, மானிப்பாய்), பாலசிங்கம் பரராஜசிங்கம் (கீரிமலை வீதி, சித்தன்கேணி), பரமுசந்திரசேகரம் (ஆஸ்பத்திரிவீதி, யாழ்) -

சீபாலசிங்கம் (கைதடி, நுணாவில்), கனிஸ்டஸ் (முடியப்பு (3 ஆம் குறுக்குத்தெரு, குருநகர்), செல்லத்துரை (பாடசாலை வீதி, வேம்படி.யாழ்), செல்லையா ஜெகதீஸ்வரன் (அல்வாரை தெற்கு), செல்லையா கந்தசாமி (கோண்டாவில்) துரைராசா பாலச்சந்திரன் (பண்டாரக்குளம் நல்லூர்), கணேசசர்மா (கைதடி), பாலசுப்பிரமணியம் துஸ்யந்தன் (புன்னாலைக் கட்டுவன் தெற்கு).

(ம-10)

# கேணல் கிட்டு நினைவு தினம் மருதங்கேணியிலும் அனுஷ்டிப்பு

வடமராட்சி கிழக்கு,ஜன.19

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவு நாள் நிகழ்ச்சிகள் மருதங்கேணியிலும் கடந்த வியாழனன்று உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பணிமனையில் இருந்து பத்து வேங்கைகளின் திருவுருவப் படங்கள் காலை 9.30 மணிக்கு பாடசாலை மாணவர்களால் ஊர்வலமாக நிகழ்ச்சிகள் நடைபெற்ற மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு எடுத்துவரப்பட்டன. நிகழ்ச்சிகள் மாமுனை அ.த.க.பாடசாலை அதிபர் சிறீராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை தியாகி திலீபன் மருத்துவமனை டாக்டர் தமிழ்வாணி ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி - கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் ஏற்றிவைத்தார்.

அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்ட கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் உருவப்படங்களுக்கு ஈகச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஞானம், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

பின்னர் அங்கு இடம்பெற்ற நினைவுரைகளின்போது வடமராட்சி கிழக்கு கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் எஸ்.பொன்னம்பலம், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் வே.அம்பலவாணேசன் ஆகியோர் உரையாற்றினர்.

(ம-182)

## தைப்பூச நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.19

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச மஞ்சத் திருவிழா இன்று மாலை 4.00மணிக்கு நடைபெறவுள்ளது.

பகல் 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெறவுள்ளன. (எ-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.19

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில் இன்று தைப்பூசத் திருவிழா நடைபெறவுள்ளது. (எ-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.19

வண்ணை அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் (கதிரேசன் கோவில்) இன்று தைப்பூசத்தினத்தை முன்னிட்டு நண்பகல் 11.00மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும். (எ)

☆ ☆ ☆

கரவெட்டி,ஜன.19

கொற்றாவத்தை உப்புக் கிணற்றடி அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தைப்பூசத்தை முன்னிட்டு விசேட பூசையும் மாலை 4மணிக்கு விசேட மங்கல பூசையும் நடைபெறும்.

(எ-70)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.19

தென்கோவை சிவஞான வைரவர் ஆலயத்தின் மணவாளக் கோலவிழா தைப்பூசத் தினமான இன்று காலை 7மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (எ-10)

## சனசமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.19

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத் திறப்புவிழா இன்று பிற்பகல் 5மணிக்கு ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதம விருந்தினராகவும் அரச அதிபர் செ. பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர் மறுமலர்ச்சிக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ம-ரி)





மூத்த தளபதி கேணல் கிட்டுவின் நினைவுதினமான கடந்த வியாழனன்று வடமராட்சி திருவில் நினைவுத்தூபி அமைந்த இடத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பத்து வீரவேங்கைகளின் உருவப் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்ததை முதலாவது படத்திலும் - வடமராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் துயா ஈகச்சுடர் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் - அரசியல் துறையைச் சேர்ந்த மதிவதனி தேசியக் கொடியேற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:கரவெட்டிச் செய்தியாளர்)*

# ஈராக்கைத் தாக்குவதை நிறுத்து; உலகெங்கும் நேற்று ஆர்ப்பாட்டம்

## அமெரிக்க நடவடிக்கைக்கு மக்கள் பெரும் கண்டனம்

லண்டன்,ஜனவரி19

**ஈராக் மீது போர் தொடுப்பதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா முழுமூச்சில் மேற்கொண்டு வரும் இவ்வேளையில் அதன் செயற்பாடுகளைக் கண்டித்தும் ஈராக் மீது போர் தொடுக்கக் கூடாது என்று கோரியும் உலகெங்கும் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. உலக நாடுகளின் முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கில் கூடிய மக்கள் அமெரிக்காவின் போக்கிற்கு எதிரான தமது உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.**

**ஜப்பானிலும் பாகிஸ்தானிலுமே முதலில் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள பல தலைநகரங்களிலும் முக்கிய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. மிகப்பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் அதிபர் புஷ்ஷின் இல்லம் எதிரே இடம்பெற்றது.**




பாகிஸ்தானில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். அமெரிக்காவுக்கு எதிராகவும் அதிபர் புஷ்ஷுக்கு எதிராகவும் அங்கு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தேநீர்க் கடை உரிமையாளரான டெர்மோகாறு ஜமாசுஷி (வயது 45) ஏ.எவ்.பி.செய்தி சேவையிடம் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நடவடிக்கைகள் குறித்து தான் கோபமடைந்திருப்பதாகத் தெரிவித்தார். "நான் நினைக்கிறேன், அதிபர் புஷ் ஒரு மாடு மேய்க்கும் பையன் (Cowboy) போன்று நடிப்பதற்கு விரும்புகிறார் என்று" - இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அமெரிக்கா நிச்சயமாகப் போர் நோக்கிப் பாயக்கூடாது என்று கருத்துத் தெரிவித்தனர். "பொது மக்கள் கொல்லப்படுவதை நாம் நிறுத்தியாகவேண்டும்" என்றும் அவர்கள் சொன்னார்கள்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலும் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பெரும் எண்ணிக்கையான சீருடை அணிந்த பாடசாலைச் சிறுவர்களும் இதில் கலந்துகொண்டனர். பத்துக் கிலோ மீற்றர் நீளத்திற்கு அவர்கள் கைகளைக் கோத்தபடி நின்று மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.

பின்னதாக, எகிப்து, பெல்ஜியம், பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தலைநகரங்களிலும் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றன. எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான ஈராக்கியர்களும் பலஸ்தீனர்களும் கலந்துகொண்டனர். "அமெரிக்காவில் தற்கொலைத் தாக்குதல் நடத்த உங்கள் பெயரை பதிந்து கொள்ளுங்கள்" என்று எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.



ஈராக் போர் குறித்து உலகமே குழம்பிப்போயுள்ள நிலையிலும் அது பற்றி எந்தக் கவலையுமின்றி தன் வளர்ப்பு நாய்களுடன் சாவகாசமாக உலாவரும் அமெரிக்க அதிபர் புஷ்.

அனைத்திலும் பெரியதான ஆர்ப்பாட்டப் பேரணி அமெரிக்காவில் இடம்பெற்றது. சுமார் 50 ஆயிரம் மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். பல முக்கிய ஹொலிவூட் நட்சத்திரங்களும் அதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் வியட்நாம் போரில் அந்த மக்களுக்கு ஆதரவாக அமெரிக்கர்கள் அனுதாபங்கொண்டது போன்ற ஒரு உணர்வலையை தற்போதும் அமெரிக்க மக்களிடம் ஏற்படுத்துவதே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இதற்கிடையில் -

ஈராக் மீதான போருக்கான ஏற்பாடுகளை அமெரிக்கா தொடர்ந்தும் தீவிரமாக மேற்கொண்டுவருகிறது. ஆயிரக்கணக்கில் அமெரிக்கத் துருப்பினரும் கடற்படைக் கலங்களும் தொடர்ந்தும் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. (ம)




வளைகுடா செல்லும் தன் இராணுவ தந்தையை வழியனுப்பி வைக்கும் தனயன் ஒருவன். 'வீ லவ் யூ டடி' என்று எழுதப்பட்ட பதாகையையும் அவன் தாங்கியுள்ளான்.



பழைய டில்லியில் சேரிப்புறம் ஒன்றில் தெருவில் மூட்டிய சிறிய தீயில் தனது கரங்களை குளிர் காய வைக்கின்றான் இந்தச் சிறுவன்.

வட இந்தியா முழுவதையும் குளிர் வாட்டி எடுக்கிறது. தென்னாசியாவில் கடும் குளிரினால் இது வரை ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். (ஐ)

## ஆஸ்திரேலியாவில் மீண்டும் பெரும் காட்டுத் தீ

சிட்னி,ஜன.19

ஆஸ்திரேலியாவில் முக்கிய நகரான கான்பராவைச் சூழ பெரும் காட்டுத் தீ பரவியுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உடனடியாக அங்கு அவசர காலநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நகரத்தின் பெரும் பகுதி தீயினால் சூழப்பட்டுள்ளதால் அங்குள்ள டசின் கணக்கான வீடுகள் ஏற்கனவே தீயில் எரிந்து நாசமாகி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீ சூழ்ந்துள்ளதால் அங்கு வெப்பநிலை பெருமளவுக்கு உயர்ந்துள்ளது. நகரத்தில் சிக்கிக் கொண்டுள்ள சுமார் 30 சமூகங்களைச் சேர்ந்த மக்கள் இதனால் பெரும் உயிர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டாலும் இன்னும் அதிகளவானோர் அங்கு சிக்கிக்கொண்டுள்ளதாக தெரிகிறது. வெப்பநிலையைத் தணிப்பதற்கு வீடுகளில் உள்ள குளிக்கும் தொட்டிகளில் தண்ணீரை நிறைத்துவிட்டு அதற்குள்ளும் அதற்கருகிலுமாகவே நகரில் சிக்கிக்கொண்டுள்ளவர்கள் வாழ்வதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தக் காட்டுத் தீயினால் குறைந்தது ஒருவர் உயிரிழந்ததாக உள்ளூர்ச் செய்திகள் தெரிவித்தன. மேலும் டசின் கணக்கானவர்கள் தீக் காயங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தீயினால் எழுந்த பெரும் புகை மூட்டம் நகரைச் சூழ்ந்து சூரியனையே மறைத்து விட்டதாக அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

தீயைக் கட்டுப்படுத்த மீட்புப் பணியாளர்களும் தீயணைப்புப் படையினரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதும் தீ கட்டுக்கடங்காமல் எரிந்துகொண்டிருப்பதாக அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். (ம)

## இப்போதைக்கு அணுகுண்டு தயாரிக்கும் திட்டமில்லை: வடகொரியா அறிவிப்பு

சியோல்,ஜன.19

அணுகுண்டுகளைத் தயாரிக்கும் திட்டமேதும் இப்போது எம்மிடமில்லை. ஆக்கப் பணிகளுக்கே அணுவிசையைப் பயன்படுத்துவோம் என்று வடகொரியா வெள்ளிக்கிழமை அறிவித்தது.

அணுவிசை தொடர்பாக இப்போது ஏற்பட்டுள்ள சிக்கலுக்குக் காரணம் அமெரிக்காதான் என்றும் அது குற்றம் சாட்டியுள்ளது.

அணுவிசைப் பரவல் தடுப்பு உடன்பாட்டில் இருந்து ஒருவாரத்துக்கு முன்னர்தான் விலகியது வடகொரியா. அது சரியான நடவடிக்கைதான் என்று வடகொரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அந்த உடன்பாட்டிலிருந்து விலகிவிட்டாலுங்கூட, இப்போதைக்கு அணுகுண்டு தயாரிக்கும் திட்டமேதும் எம்மிடம் இல்லை. மின்சார உற்பத்தி போன்ற ஆக்கப் பணிகளுக்கே அணுவிசையைப் பயன்படுத்துவோம்.

ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் உடன்பாட்டைச் செய்துகொள்ளலாம் என்று அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் அதை ஏற்க மறுத்த அமெரிக்கா, அதற்கு முன்நிபந்தனையாக, அணுவிசைத் திட்டத்தை வடகொரியா கைவிட வேண்டும் என்று நிர்பந்தித்துவருகின்றது.

அதுதான் தற்போதைய சிக்கலுக்குக் காரணம் என்று வடகொரிய கம்யூனிஸ்ட் கட்சி நாளேடான 'ரோடாங் சின்மும்' தெரிவித்துள்ளது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இரண்டு குளிர்சாதனப் பெட்டிகள் (01-Double Door) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C. அருகில்).(13395)

இசைக் கருவிகள் Yamaha Psr 740 Roland Spd 20 தபேலா (India) 2 எலக்ரிக் கிற்றார் என்பன விற்பனைக்குண்டு. இல.73, பழம் வீதி, கந்தர்மடம். (13383)

நல்ல நிலையிலுள்ள ரோனியோ இயந்திரங்கள் Super Fax Re-450 மொடல் மற்றும் Rex Rotary 450 மொடல் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: R.மருதலிங்கம் (மருதம்), இல.66, மணிக்கூட்டுகோபுரவீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (13391)

சுன்னாகம், கந்தரோடை வீதி Churchஇற்கு அண்மையில் 3 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சுட்டி மாஸ்ரர் 207, K.K.S. வீதி, சுன்னாகம். T.P.074-212709.(13246)

ஹெல்மெட், லைசென்ஸ் தேவையற்ற நியூமொடல் மோட்டார் சைக்கிள் ஒன்றும் (TVS வகை) AIWA ஓடியோ வீடியோ MP3 செற் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: V.இரட்ணசபாபதி, வைரவர் கோயிலடி, நாலுகால்மடம், ஆனைக்கோட்டை. (13225)

நிறை கூடிய புறொயிலர் கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் மற்றும் கிறேட்டன் ஒருவயது நிரம்பிய பெண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் றெஸ்ரோறன்ற் முன்பாக). (13366)

நிறைகூடிய புறொயிலர் கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி (முடமாவடிச் சந்திக்கும் பூங்கனிச் சோலைக்கும் இடையில்). (13240)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (13350)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 23.01.2003 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். 19.01.2003 இற்கு முன் பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (13110)

## வீடு விற்பனைக்கு

கொக்குவிலில் 4 பரப்புக் காணியில் நல்ல பிரயோசனங்களுடைய தும் வெள்ளைக் கருங்கல் கிணறும், கடையுடனும் கூடிய விசாலமான வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு: S.அரசரத்தினம், சேச்லேன் (முதலி கோவிலடி), தாவடி, கொக்குவில். (13396)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய அழகான ஒரு சோடி Great Dane - Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(13349)

## புதிய வகுப்பு

தரம் 6
ஆங்கில மொழிமூலம்
(ENGLISH MEDIUM)
ஞானக்குழந்தை கல்விக்கழகம்
19, சிவன் வீதி, திருநெல்வேலி.
T.P: 3726
ஆரம்பம்: 19.01.2003
நேரம்: 2.30p.m.
(13392)

## ஒத்து மாறல் (MUTUAL TRANSFER)

கொழும்பு மாவட்ட ஆசிரியை ஒருவர் யாழ். மாவட்ட ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்

தொடர்பு:
G. ஸ்ரீகாந்தன்
126/7 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்
(13393)

## திருமண சேவை

இந்து, கிறிஸ்தவ மணமக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உண்டு. திருப்தியான, துரிதமான சேவை. தொடர்பு: மாங்கல்யா மல்ரி சேவிஸ், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு, இயக்குநர் கு.திருவிளங்கம்.(13045)

## மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திரமும் 1972இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய, 5அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக்குறிப்பு, புகைப்படங்களுடன் நேரில் சமுகந்தரவும் பகிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P. 2789 (13309)

## சனிமாற்றம் எப்படி?

(07-04-2003) வரை திருக்கணிதப்படி இடபராசியில் சனி மாற்றமும் தைப்புத்தாண்டின் எல்லா ராசிப் பலன்களும் 15/-. எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர்: சத்யா, ஆனைக்கோட்டை. 021-222 2753 யாழ்.பஸ்நிலையப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.(13403)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலி.தெற்கு,ஜன.19

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இம்மாதம் 21ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பதில் உதவிப் பிரதேச செயலர் த.தேவராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து பிரதேச புனரமைப்புக் குழுக் கூட்டம், விவசாயக் குழுக் கூட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன. (எ-152)

## பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்தின் பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 20ஆவது வருட பொதுச் சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கனகசபாபதி, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர். (எ-135)

## திருமண வாழ்த்து

இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் திருமண வாழ்வில் முதலாம் ஆண்டைப் பூர்த்தி செய்யும்

**திரு.திருமதி ரஞ்சித் அனிற்றா** தம்பதிகளை

பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| செல்வராசா தம்பதிகளும் குடும்பமும் | இராசநாயகம் தம்பதிகளும் குடும்பமும் |
| இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். | 189, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

(13389)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 17 - 04 - 1924



உதிர்வு 20 - 12 - 2002

### அமரர் நாகநாதர் இராமலிங்கம்

(முதலாம் வட்டாரம், புங்குடுதீவு)

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு நேரடியாகவும், செய்திகள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியும், அனுதாபம் தெரிவித்தும் உடனிருந்து உதவிய அனைவருக்கும் எம் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (19.01.2003) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*155/2,வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (13368) - குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 17 - 09 - 1967



உதிர்வு 20 - 12 - 2002

### செல்வி சசிகலா சபாரட்ணம் (எஸ்.எஸ்.கலா)

எமது சகோதரியின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எமக்குத் துணை புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*57/04, ஸ்ரேசன் றோட், வவுனியா.* (13244) தகவல்: எஸ்.சாரதா(சகோதரி).

## திராந்தி (பாலை) விற்பனை

மேற்படி எமது ஆலயப் பாவனையில் இருந்த மிகவும் நல்ல நிலையில் உள்ள இராசமல்லு ஊசிக்கால் திராந்திகள் (பாலை) விற்பனைக்குண்டு.

**இராசமல்லு நீளம்: 18 அடி 8" x 5"**

பார்வையிடும் நேரம்: தினமும் மாலை 5.00 மணி - 7.00 மணி வரை

தொடர்பு:
தலைவர்/செயலாளர்
பரிபாலன சபை
அரியாலை மேற்கு வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்
(13383) புவனேஸ்வரி அம்பாள் ஆலய வீதி, அரியாலை மேற்கு.

# CAREER OPPORTUNITIES

**We have Vacancies in the following positions for ideal candidates who are enegetic, dynamic and result oriented**


1. **MANAGER** (Able to handle in bound & out bound passengers, Cargo, Local & overseas ticketing and manage the travel agent with fluenty in three languages)
2. **STATION MANAGER** (ability to handle the domestic airline)
3. **ASSISTANT MANAGER**
4. **SALES MANAGER**
5. **TICKETING OFFICER**
6. **ACCOUNTS CLERK**
7. **FIELD OFFICER**
8. **SECURITY GUARD**
9. **DRIVER**
10. **TECHNICIAN**
11. **STORE KEEPER**

**Please forward your applications along with a detailed curriculum vitae to reach us within 7 days of this advertisement.**

Human Resource Manager
THAMPI AIR TOURS (PTE) LTD
A MEMBER OF
THAMPI HOLDINGS (PTE) LTD.
90, Kanthappasekaram,
Jaffna. (சி-26130)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

வரவு 26 - 04 - 1921



பிரிவு 20 - 12 - 2002

### திருமதி குணலட்சுமி தருமபாலு

(வேலணை)

*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன*
*'அம்மா' என்று அழைக்க நீ இல்லை*
*தாயெனத் தழுவிட நீ போனால்*
*தாங்குமோ நெஞ்சம்; இல்லை இல்லை*
*நீ இல்லை என்று சொல்ல நெஞ்சமேயில்லை*
*உனையிழந்து மனம் இன்னும் ஆறுதில்லை*
*தாயே நீ விடை பெற்றுப் போனதென்ன!*
*தவிக்கவிட்டுப் போக மனம் வந்ததென்ன!*

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

எமது குடும்பத்தலைவி திருமதி குணலட்சுமி தருமபாலு அவர்களின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றிகள்.

இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*179, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (13402)

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

## உதயன்

### தெளிவு வேண்டும்!

எமது சொந்த நிலத்தில் - சகல உரிமைகளுடனும் நிம்மதியாக வாழ்கின்ற நிலைமை உருவாகும்வரை தமிழினம் ஓய்ந்திருக்க முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வணபிதா. எஸ். ஜே. இம்மானுவேல் இப்படி தெளிவுபட தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய விழிப்புணர்ச்சியை சரியான தருணத்தில் தட்டி எழுப்பிவிட்டமைக்காக பொங்குதமிழ் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களைப் பாராட்டியிருக்கின்ற வணபிதா, இறுதி லட்சியம் கைகூடும்வரை இப்படி பலவழிகளில் போராடிக்கொண்டே இருக்கவேண்டிய அவசியம், கடப்பாடு தமிழினத்தின் முன்னுள்ளது. இதல் ஓய்வு ஒழிச்சலுக்கு இடமளிக்கவே கூடாது என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தமிழ் இனத்தின் போராட்டத்தின் நியாயப்பாட்டை நன்கு விளங்கிக்கொண்டு அதனை ஆதரித்து உலகெங்கும் பேசிவருபவர் என்ற ரீதியில் வணபிதா இம்மானுவேலின் கூற்றுக்கள் ஒவ்வொரு தமிழனும் தெளிவுடன் இருக்க வேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்கின்றன.

தமிழ் இனத்தின் தலைமையையும் அந்தத் தலைமையின் போராட்ட வடிவங்களையும் ஆதரித்து ஏற்றுக்கொண்டிருக்கும் உலகத் தமிழ் இனம் இன்றைய சமாதானச் சூழ்நிலையில எதனைச் சிந்திக்கவேண்டும், எவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்பதை சொல்லாமற் சொல்லியிருக்கிறார் அவர்.

இலங்கையின் இரண்டு முக்கிய தேசிய இனங்களின் தலைமைகளாக அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் உலகம் நோக்குகிறது. பலநாடுகள் இதனை வெளிப்படையாக ஏற்றும் உள்ளன. அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் தனது அரசு சரிசமமாக வைத்து நோக்குகின்றது - என்று ஜப்பானின் விசேட தூதர் யசூஹி அஹாஷி தெரிவித்திருப்பதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தமிழ் மக்களின் போராட்டம் இப்படியான ஒரு நிலைமைக்கு தமிழ் இனத்தை உயர்த்தி வைத்திருக்கிறது. இதற்காகச் செய்யப்பட்ட தியாகங்களும், இழப்புக்களும் ஏராளம். ஒவ்வொரு தமிழனும் இவற்றை மறந்துவிடக் கூடாது.

தற்போதைய சமாதான பேச்சுக்கள் இனப்பிரச்சினைக்கான - தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கான - இறுதித் தீர்வுக்காக முன்னெடுக்கப்படுகின்றன. ஆயுதவழியிலான போராட்டத்தில் உச்ச வளர்ச்சி கண்ட தமிழினம் இன்று சமாதான வழிமூலம் உச்சப்பயன்பாட்டை எய்த முடியும் என்ற நம்பிக்கையுடன் அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறது.

இந்த வழியினூடாக அடையப்படுகின்ற இலக்கு தமிழ் மக்களின் நிம்மதியான சுபீட்சமான வாழ்வுதான். ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்திருக்கும் நாங்கள் போராட்டத்துககு ஓய்வு கொடுத்துவிடவில்லை.

அந்த வகையில் இறுதி லட்சியத்துக்கான போராட்டங்கள் பல வழிகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும். ஒட்டுமொத்த தமிழ் இனமும் உணர்வுத் தீயை அணையவிடாமல் பாதுகாத்து அது கனன்று கொண்டே இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டமாயினும் சரி, ஏனைய மக்கள் அமைப்புகளால் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களும் சரி அடிப்படையில் - இறுத இலக்கில் - தெளிவாக இருக்கவேண்டிய அவசியத்தை வணபிதா இம்மானுவேல் வலியுறுத்தியிருக்கிறார். இதன்ன அனைவருமம மனம்கொள்வோம்.

# துணை மருத்துவ அலுவலர்களுக்கான பயிற்சி நிலையம் வடக்கில் நிறுவப்படும்

## நலனோம்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

வலி.வடக்கு, ஜன.19

துணை மருத்துவ அலுவலர்களை தமிழ் மொழியில் பயிற்றுவிப்பதற்கான பாடசாலையொன்று வடக்கில் நிறுவப்படும். அதற்குரிய உடனடி நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் சுகாதார போசாக்கு நலனோம்பு அமைச்சின் செயலாளர் ரெஜிபெரேரா.

யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிமனையை நேற்றுக் காலை திறந்துவைத்து உரைநிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் தலைமையல் இந்தத் திறப்பு நடைபெற்றது.

அமைச்சுச் செயலாளர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் பரவலாக துணை மருத்துவ அலுவலர்களுக்குத் தட்டுப்பாடு நிறையவே காணப்படுகிறது. துணைவேந்தர் குறிப்பிட்டதைப் போன்று இங்கு தமிழ்மொழிமூலம் துணை மருத்துவ அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

இங்கு காணப்படும் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளை நன்கு உணர்ந்து கொள்கின்றேன். ஊழியர்களின் பற்றாக்குறையையும் உணருகின்றேன். இந்நிலையை மாற்றி அமைப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

துணை மருத்துவ அலுவலர்களைப் பயிற்றுவிப்பது சம்பந்தமாக ஆராயப்படுகின்றது. இவ்வாறு பயிற்றுவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. வெகுவிரைவில் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இத்தகைய துணை மருத்துவ ஊழியர்களை பயிற்றுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது சம்பந்தமாக ஆராயப்படுகின்றது.

இதற்காக தனியார் துறையினரிடம் இவர்களை உருவாக்குவதற்கான எந்தவொரு செயற்பாடும் கையளிக்கப்பட்ட மாட்டாது - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும்போது:-

துணை மருத்துவ அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளுத்துறையில் அமைந்துள்ளது. அதுவும் சிங்களமொழி மூலமே பயிற்சிகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழிமூலமான துணை மருத்துவர்களை பயிற்றுவிப்பதற்கான பாடசாலை ஒன்று நிறுவப்படவேண்டும்.

தற்போது பரவலாக இங்கு துணை மருத்துவ அலுவலர்களுக்கு பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. பல்கலைக்கழகத்தில் கூட 72 வயது நிரம்பிய ஒருவரையே மீள் நியமனத்தின் அடிப்படையில் துணை மருத்துவராக கடந்த காலத்தில் நியமித்துள்ளோம்.

பரவலாக இங்குள்ள வைத்தியசாலைகள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உள்ளாகியுள்ளது. கட்டடப் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை என பல குறைபாடுகளும் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மத்திய மருந்தகங்கள், கிராமிய வைத்தியசாலைகள் மிகவும் குறைந்த வசதியுடனேயே இயங்குகின்றன. இதன் காரணமாக பிரதான வைத்தியசாலைகள் அதிக சேவையை ஆற்ற வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளன - என்றார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு வெண் பொங்கல் கொடுத்து உபசரிப்பு வழங்கப்பட்டது. (எ-86)

## கசிப்பு உற்பத்தி செய்தோர் கலாசார பேரவையிடம் சிக்கினர்

### துன்னாலை மேற்கில் சம்பவம்

கரவெட்டி, ஜன.19

கரவெட்டி, துன்னாலை மேற்கில் பெருந்தொகையான கசிப்பு உபகரணங்கள், கோடா என்பன மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் கசிப்பு உற்பத்தியாளர்களான 3 பெண்கள் உட்பட ஏழுபேர் நல்லெண்ணக் கலாசாரப் பேரவையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை துன்னாலை மேற்கு வாய்க்கால் தெருப்பகுதியில் திடீரென சோதனை நடத்திய நல்லெண்ணக் கலாசாரப் பேரவையினர் மேற்படி கசிப்பு உற்பத்தியாளர்களை மடக்கிப் பிடித்ததுடன் 30 பரல் கோடா, 50 பரல் கசிப்பு சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களைக் கைப்பற்றினர்.

பின்னர், பெரும் திரளான மக்கள் முன்னிலையில் மேற்படி பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. உற்பத்தியாளர்கள் எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (எ-70)

## மாநகர அபிவிருத்திக்கு கடந்த வருடம் ரூ. 81லட்சம்

### செலவிடப்பட்டது என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கென கடந்தாண்டில் மட்டும் ரூபா 81லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் எஸ்.இராமலிங்கம் தெரிவித்தார்.

மாநகராட்சி மன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் வீதிகள் புனரமைப்பு, சனசமூக நிலையங்களுக்கான புத்தகங்கள், தளபாடக் கொள்வனவுகள் மகப்பேற்று நிலையங்களில் பிள்ளைகளைப் பராமரித்தல் சுகாதாரம் போன்ற வேலைகளின் நிமித்தமே மேற படி நிதி செலவிடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டநிதி புனர்வாழ்வுத் திட்டநிதி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி, பிரமாண அடிப்படையிலானநிதி, மீள் குடியமர்வு, அகதிகள் விவகார அமைச சினால் வழங்கப்பட்டநிதி என்பனவே இவ்வாறு பயன்படுத்தப் பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

## பாதீனியத்தை ஒழிக்க மருந்து

பெருகிவரும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலவசமாக களைகொல்லி மருந்து விநியோகிக்கப்படுகின்றது.

புத்தூர் கமநல சேவை பிராந்தியத்தில் உள்ள விவசாய சம்மேளனங்கள், விவசாய அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் அதனைப் பயன்படுத்தி தமது பிரதேசத்தில் உள்ள பாதீனியங்களை அழிக்குமாறு புத்தூர் கமநல சேவைநிலைய விவசாயப் போதனாசிரியர் எஸ்.தம்பிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-11)

# தனங்களப்பில் மீளக்குடியமர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தாருங்கள்!

## மறவன்புலோ சனசமூக நிலையம் மகஜர்

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் இடம்பெயர்துள்ள தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேச மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித்தாருங்கள்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் மறவன்புலோ மத்தி பாரதி சனசமூகநிலையத்தினர்

இது குறித்து அவர்கள் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி மூன்று கிராமங்களைச் சேர்ந்த 557 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் யுத்த நடவடிக்கை காரணமாக 12.12.1999 அன்று தத்தமது வாழ்விடங்களை விட்டு மிகுந்த அவலத்துககு மத்தியில் எவ்வித உடைமைகளும் எடுக்கமுடியாத நிலையில் வெளியேறினர்.

எமது கிராமம் தென்மராட்சியில் நெற்களஞ்சியம் எனும் பெயர் கொண்டது.விவசாயிகள், மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள், சீவல் தொழிலாளர்கள் என்னும் தொழில்சார் குடிமக்களைக் கொண்டது

கோரதீவு முனையிலுள்ள ஐயனார் ஆலயம் முதல் மறவன்புலோ மேற்கு, வடக்கு அடங்கலாக 40 ஆலயங்கள், 3 ஆயிரத்து 500 ஏக்கர் நெல்வயல் நிலம், வளம் மிக்க 5 ஆயிரம் தென்னைகள், 25 ஆயிரம் பனைகள் கோடைகாலத்தில் தனங்களப்பு அறுகு வெளியில் விளையும் உப்பு, எக்காலத்துககும் வருவாய் கொடுத்த மீன் பிடித்தொழில், ஒரு வீட்டுக்கு குறைந்தது 10 மடு, 25 ஆடு, 25 ஊர்க்கோழிகள் (சில வீடுகளில் குறைந்தது 150 மாடும் உள்ள நிலையில்) இறுதியாக 12.12.1999 இல் 5 ஆயிரம் மாடு, 5 ஆயிரம் ஆடு என்பனவற்றையும் கைவிட்டுவிட்டு நாம் இடம்பெயர்ந்தோம்.

மேற்படி பகுதியில் வசிக்கும் மக்களை வழிப்படுத்த 7 சனசமூக நிலையங்கள், 3 கிராமமுன்னேற்றச் சங்கங்கள், 2 மீன்பிடிச் சங்கங்கள், மாதர் சங்கங்கம், இந்து நிறுவனங்கள் என்பன இயங்கின. 3 கூட்டுறவுக்கடைகளும், தபாலகமும், 10 வியாபாரநிலையங்களும், சுகாதாரநிலையமும், நெசவுநிலையமும், சிறிய-பெரிய 40 குளங்களும் 3 கிராமத்தையும் பொலிவுறச் செய்தன.

12.12.1999 கால யுத்தத்தின்பின் 12.02.2002 தொடக்கம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தென்மராட்சிக்கு வருகைதரும்வரை பொதுமக்கள் தங்கள் இடங்களைச் சென்று பார்வையிட்டுவந்தனர். பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி மக்கள் அங்கு செல்ல தடைவிதிக்கப்பட்டது. எமது கோரிக்கைகள் சில வருமாறு:-

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் மேற்கூறப்பட்ட 3 கிராமங்களிலும் மீளக்குடியமரக்கூடிய ஏது நிலை உருவாக்கித்தரப்படவேண்டும்.

அத்துடன், அழிக்கப்பட்ட குடியிருப்புக்களுக்குப் பதிலாக புதிய குடியிருப்புக்களை 'சீராண்' அலுவலகம் மூலம் கட்டித்தரப் படவேண்டும்.

உவர் நிலமாக மாறிக்கொண்டிருக்கும் நெல் விளை நிலங்களினைப் பண்படுத்தி, எமது திட்டத்துடன் இணைந்து 3 காலமும் பயிர் செய்யக்கூடிய வகையில் திட்ட நடைமுறைப்படுத்தலுக்கு உத்தரவு வழங்கப்படுதல் வேண்டும்.

கட்டாக்காலியாக அலையும் 5 ஆயிரம் மாடுகளையும் ஒரு முகப்படுத்தி பண்ணை உருவாக்கித்தரப்படவேண்டும்.

தென்மராட்சியில் உள்ள சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் புனரமைக்கப்படுதல் வேண்டும்.

கிராமியப் புனரமைப்பின்போதும், வீதிகள், குளங்கள் புனரமைப்பின் போதும் அப்பிரிவு சனசமூக நிலையங்களின் ஆலோசனையும், ஆதரவும் பெறப்படவேண்டும்.

இவற்றினை தாங்கள் பரிசீலனை செய்வதுடன் தென்மராட்சி நெற்களஞ்சியத்தை, கடல், தென்னை, பனை, கால்நடை வளத்தை நாம் பாதுகாக்க ஆவன செய்து தரவேண்டும். படையினருடன் இணைந்து எமது கால்நடைகளை இறைச்சியாக்குபவர்களையும், அனைத்து வளங்களையும் களவாடி விற்பவர்களையும் தண்டிக்க வேண்டும். - என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-75)

### நாளை

தை 06
திங்கட்கிழமை
(20.01.2003)
திதி : துதியை
பிற்பகல் 3.07 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 3.13 வரை.
சுபநேரம் : 12.35 - 2.05
ராகுகாலம் : 8.05 - 9.35
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பெருமை பெற விரும்புகிறவன் பெருமைக்குரிய காரியம் ஏது எனத் தேடியலைந்து செய்யக்கூடாது. உள்ளத்தில் பட்ட நல்ல காரியத்தைச் செய்வதே பெருமை.

# செல்வி தாமினி தவமோகன்

## இருதய சத்திர சிகிச்சை

We Serve

## ரூபா 400,000/-

மேற்படி மாணவி உயிர் வாழவிரும்புவோர் தயவுசெய்து பின்வரும் கணக்குகளில் யாதேனும் ஒரு கணக்கில் உங்கள் அன்பளிப்பை வைப்புச்செய்யவும்.

1. சேமிப்பு கணக்கு இலக்கம் 8060004425
   இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.
2. சேமிப்பு கணக்கு இலக்கம் 17496
   இலங்கை வங்கி, மானிப்பாய்.

காலதாமதம் செய்வதால் உங்களின் அன்பளிப்பு சத்திர சிகிச்சைக்கு உதவாமல் போகலாம். அன்பளிப்புத் தொகையை எமக்கும் அறிவித்தால் பற்றுச்சீட்டு வழங்குவது இலகுவாக இருக்கும்.

லயன் மா.தியாகராஜா — தலைவர்.
லயன் செ.கேசவராஜன் — செயலாளர்.

(13238) மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம்.


# அறிவித்தல்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் தைப்பூச அன்னதானம்

அம்பிகை அடியார்களே,

இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் தைப்பூச பெருவிழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களிற்கு சிறந்த முறையில் அன்னதானம் வழங்குவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் எமது சபை செய்துள்ளதென்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம். இன்றையதினம் அடியார்களின் பிரயாண வசதிகருதி மு.ப. 11.00 மணி தொடக்கமே அன்னதானம் வழங்கவும் அதற்கேற்றவாறு வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம். அடியார்களே எமது சபையால் செய்யப்படும் அன்னதானத்திற்கென பல அடியார்களால் நன்கொடையாக அனுப்பப்பட்ட பணம் சரியான விலாசம் குறிப்பிடாமையால் வேறு தாபனத்துக்குச் சென்றுள்ளதாக அறிகின்றோம். எனவே, தயவுசெய்து எமது சபையின் அன்னதான தொண்டுக்குப் பணம் அனுப்பும் அடியார்கள் *நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி "அமுத சுரபி அன்னதான சபை"* என விலாசமிட்டு அனுப்புமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபையினர்.

(13386)

ஓம் சாயிராம்

# சுன்னாகம் சாயிபாத மந்திர் திறப்பு விழா

மேற்படி பாதமந்திர் அமைப்பு வரைபடம் 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி பகவான் சத்தியசாயி பாபாவினால் நேரில் பிரசாந்தி நிலையத்தில் ஆசீர்வதித்ததுடன் மேலும் 23.07.1997 அன்று அடியேன் தாங்கிய வெள்ளிப் பாதுகைகளின்மீது தனது திருக்கரங்களினால் ஆசி வழங்கினார். பாத மந்திர் கட்டட அடிக்கல் 1998ஆம் ஆண்டு நாட்டப்பட்டு கட்டட வேலைகள் சிறிது சிறிதாக முன்னேறியது. சென்ற ஜூலை மாதத்தில் சாயி பாத மந்திர் பூரணமாகக் கட்டிமுடித்து திறப்பு விழாவை இம்மாதம் முடிக்க வேண்டியதை உணர்ச்சிபூர்வமாக சுவாமிக்கு 19.07.2002 திகதியிடப்பட்ட கடிதம்மூலம் எழுதிச் சேர்ப்பித்தோம். இது சேர்ப்பித்த ஒரு சில தினங்களில் பகவான் அடியேனுக்கு கனவிலே தோன்றி பாதரிசனம் அருளிய சில தினங்களில் சுவாமியின் அருளினால் அடியேனுக்குத் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் சாயியின் கருவியாக இருந்து தன்னிச்சையாகப் பல லட்சம் ரூபாக்களை அன்பளிப்பாகக் கொடுத்ததன் விளைவாக சாயிபாத மந்திர் கட்டட வேலைகளின் சில முக்கிய பகுதிகளை நிறைவேற்றி தைப்பூசதினமாகிய இன்று 19.01.2003 காலை 9.00 மணிக்கு ஓர் அமைதியான, எளிமையான சூழ்நிலையில் சாயிபாத மந்திர் திறப்பு விழாவை ஆத்மீக சாதனைகளை சாயிபாத மந்திரில் தொடர பகவான் அருளாசி தொடரும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு என்பதை சாயி அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைய தினத்தில் சுவாமி கூறியது போன்று பணத்திற்கு முக்கியத்துவம் கொடாது, அன்புக்கு முதலிடம் கொடுத்து அன்பை சுவாமிக்கு காணிக்கையாகச் செலுத்தி, சுவாமியின் அருளாசியைப் பெறுங்கள்.

*190, கே.கே.எஸ். வீதி,*
*சுன்னாகம்.*

மா.தேவராசா
நிலையத் தலைவர்.

(13379)

# 31ஆம் நாள் நினைவலைகள்



பூமாதேவியின் மடியில் 1952 - 12 - 28

இறைவனின் திருவடியில் 2002 - 12 - 20

திருமதி

## சரவணமுத்து தபேந்திராணி

இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*நாவற்காடு,*
*வரணி.*

துயருறும்:
குடும்பத்தினர்.

(13321)

## ஆரம்ப நிகழ்வு

செம்பியன்பற்று,ஜன.19

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நூலகம், அறநெறிப் பாடசாலை ஆகியவற்றை இன்று காலை 10மணிக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்து ஆரம்பித்துவைக்கவுள்ளார். இன்றைய தினம் சுமார் 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப் படவுள்ளன. (எ-36)

## கசிப்பு உற்பத்தி செய்தவர் பொலீஸாரிடம் சிக்கினார்

சண்டிலிப்பாய்,ஜன.19

இளவாலை பொலீஸார் இளவாலை சென்ஜூட் பகுதியிலுள்ள வீடு ஒன்றைத் திடீர் முற்றுகையிட்டு அங்கு சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர். இச்சம்பவத்தின் போது அவ்வீட்டிலிருந்து 8போத்தல் கசிப்பையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சியதற்காக இந்த நபர்மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்! 40 வருட அனுபவத்தில்!!!

## புதிய கல்நார் இழை CEY NOR வகைப்படகுகள்

விலை ரூபா 95,000 மட்டுமே

- கையிருப்பில் உள்ளவை தீரும் வரை மட்டுமே இச்சலுகை
- கடற்றொழில் சங்கங்கள் மூலம் பெறும் படகுகளுக்கு மேலும் விசேட சலுகையுண்டு.
- மீன்பிடி இலாகாவில் பதிவுசெய்து பதிவுப் புத்தகமும் பெற்றுக்கொள்ள ஒழுங்குசெய்யப்படும்.

அரியசந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

# செல்வம் சமுத்திர கலத் தொழிலகம்

(13307) 48/2, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2880


ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 5ஆம் நாள் இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிமுதல் 11.55 மணிவரையுள்ள பிரதமை திதியும், பூசம் நட்சத்திரமும், சித்தயோகமும், ரிஷப லக்னமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

விஸ்வப் பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் புத்திரன்
***கிருஷ்ணகுமார்***
(குமார்) அவர்களுக்கும்

விஸ்வப் பிரம்மஸ்ரீ துரைசிங்கம் - இராஜலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
***துவாரகாதேவி***
(செல்வி) அவர்களுக்கும்

திருமணம் நடைபெற திருவருள் கைகூடி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நெதர்லாந்தில் திருமணம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வைபவ இடம்: **Stichking Gemeenshaps Huis**
**De Duup Dorpsstraat - 97**
**Asenray Roermond, Netherlands.**

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

*திரு.திருமதி சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்*
'நந்த வாசம்' சொர்ணவடலி வீதி,
கொக்குவில் மேற்கு - கொக்குவில்.

லேட்.திரு.திருமதி துரைசிங்கம் குடும்பத்தினர்
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

☞ மணமகன் இல்லத்தில் இன்று பிற்பகல் 4.00மணிக்கு வரவேற்புபசாரம் நடைபெறுவதால் அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(13184)

## மனிதர் குல மாணிக்கமாய்த் திகழ்ந்த தனக்கென வாழாப் பிறர்குரியாளன்



அமரர் சட்டத்தரணி

# சின்னையா சிதம்பரநாதன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.01.1932 | 29.01.2002 |

## திதி: 19-01-2003

தனக்கென வாழாது பிறர்க்குரியாளராயும் ஒருவர் வாழவேண்டும். அப்பொழுதுதான் அவர் மனிதப் பிறவியின் பயனை எய்துகிறார் என்பார்கள். தானும் வாழ்ந்து மற்றவர்களும் வாழ்ந்து சிறக்க வழிகாட்டுவதே நலல பேறு. இவ்வாறு பேறு பெற்ற ஒருவரே கோண்டாவில், இணுவில் சட்டத்தரணி சின்னையா சிதம்பரநாதன் அவர்கள்.

அமரர் சிதம்பரநாதன் அவர்கள் [illegible]மையில் நன்கு கற்று எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்தார். சுயமுயற்சியால் மேலும் மேலும் படித்துச் சட்டத்தரணியானவர். முயற்சி திருவினையாக்கும்.

தனது முன்னேற்றத்திற்கு இணுவில் கிழக்கில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் குலதெய்வமான அருள்மிகு சிவகாமி அம்பாளின் திருவருளே காரணம் என்பார். தமது முன்னோர் வழியில் சிவகாமி அம்மையின் திருவடிகளைத் திரிகரணசுத்தியுடன் வணங்கி வந்தவரான சிதம்பரநாதன் அவர்கள் ஆலய வளர்ச்சியில் அக்கறையாக இருந்தார். சித்திர வேலைப்பாடுகளுடன் கம்பீரமாகக் காட்சிதரும் சித்திரத்தேரை உருவாக்கும் குழுவுக்குத் தலைமை வகித்து உழைத்தவர்.

பரிவாரத்தில் விளங்கும் விநாயகருக்கான விழாக்களில் கண்ணுங்கருத்துமாக இருந்தவர். சிவகாமித் தாயின் தீர்த்தோற்சவம் பக்தி சிரத்தையுடன் நீண்டகாலமாக வருடந்தோறும் நடைபெற உபயகாரராக இருந்து பணிசெய்தவர். காலையும் மாலையும் கடவுளை வணங்கு என்றபடி அன்னை சிவகாமியை மனதில் இருத்தி வழிபாடு செய்தவர்.

கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயிலில் பரிபாலனசபைக்குத் தலைவராக இருந்து உழைத்ததுடன் அப்போது அங்கு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தைத் தரிசித்து உளம் பூரித்தார். காரைக்காலில் விசாலாட்சி சமேதராய் விளங்கும் விசுவநாதப் பெருமானின் மீதும் ஆராதபக்தி கொண்டிருந்தார்.

சட்டத்துறையில் பிரசித்திபெற்று விளங்கியவரான அமரர் ஆசைப்பிள்ளை தனபாலசிங்கம் (உரும்பிராய்)அவர்களைத் தொழில் முறையில் குருவாகக் கொண்டு அத்துறையிலும் முன்னுக்கு வந்தார். சிறந்த சமூக சேவையாளருமாவார்.

நல்ல மனைவி, பிள்ளைகள், மருகர், பேரரைப் பொருந்தி கலகலப்பாக வாழ்ந்தவர். இவரது மாமனார் அமரர் இ.பொ.குமாரசாமி அவர்கள் பிரபல ஆசிரியர் தொழிற்சங்கவாதியாகவும் கூட்டுறவாளராகவும் திகழ்ந்தார்.

அமரர் குமாரசாமி அவர்கள் தம்மை மற்றவர்களுக்கு அறிமுகஞ்செய்யும் பொழுது "யான் பிரக்கிராசி சிதம்பரநாதனின் மாமனார்" என்று புன்முறுவல் பூத்த முகத்துடன் கூறுவார்.

அமரர் சிதம்பரநாதன் தம்மை மற்றவர்களுக்கு அறிமுகஞ்செய்யும் பொழுது "யான் கோண்டாவில் இ.பொ. குமாரசாமி மாஸ்ரர் அவர்களின் மருமகன்" என்பார்.

மாமன், மருகர் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மரியாதையையும் அன்பையும் இதன்மூலம் அறிந்துகொள்ளலாம்.

எம்மிடத்திலே மெய்யன்புடன் நடந்துகொண்டவரான சட்டத்தரணி சின்னையா சிதம்பரநாதன் அவர்கள் விரைவாக எம்மைவிட்டுப் பிரிந்தமை கவலைதான். எனினும், அவரது செல்கதியைத் தடுத்து நிறுத்த எம்மால் முடியாது தானே!

*உரும்பிராய்.*

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்.

(13362)

### அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில்

# இரத்த வாந்தி எடுத்த சிறுவனுக்கு நான்கு மணிநேரம் சிகிச்சை மறுப்பு

## நடைமுறைச் சிக்கலால் நோயாளர்கள் அவதி

காரைதீவு,ஜன.19

ஓயாத இரத்த வாந்தி, கடும் காய்ச்சல் ஆகியவற்றால் அவதிப்பட்ட 8 வயதுச் சிறுவன் ஒருவன் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வார்ட்டில் சேர்க்கப்பட்டும் நான்கு மணித்தியாலங்களாக அந்தச் சிறுவனுக்கு சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை. பொறுப்பானவர்கள் சிகிச்சை அளிக்க மறுத்து விட்டார்கள். சிறுவன் தாங்கமுடியாத வேதனையால் துடித்துக் கொண்டிருந்தான்.

இதயத்தைப் பிழியும் ஈவிரக்கமற்ற இந்தச் சம்பவத்துக்குக் காரணம் வைத்திய அதிகாரிகளுக்கும் மருத்துவர்களுக்கும் இடையே உள்ள காழ்ப்புணர்வுகளும் நடைமுறைச் சிக்கல்களுமே என்று தெரியவருகின்றது.

வெளிநோயாளர் பிரிவுக்குச் செல்லும் நோயாளிகளை எந்தத் தரத்திலுள்ள டாக்டர் சிகிச்சைக்காக வார்ட்டுகளில் அனுமதிப்பது என்பதிலேயே தகராறு என்று கூறப்படுகிறது.

நான்கு மணிநேரமாக சிறுவனுக்குச் சிகிச்சை அளிக்கப்படாமல் இருந்தது ஏன் என்று வார்ட்டுக்கு பொறுப்பான தாதி, நோயாளி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பு எழுதியிருக்கிறார். உள்தகராறையும் நடைமுறைச் சிக்கலையும் அந்தக் குறிப்பு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தாதியின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

*மாவட்ட அதிகாரிக்கு*

*"மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில் வைத்திய அதிகாரி கடமையில் இருப்பதனால் உதவி வைத்தியர் நோயாளியை விடுதிக்கு (வார்ட்டுக்கு) நேரடியாக அனுமதிக்க முடியாது.*

*எனவே, விடுதியைப் பார்வையிட்ட வைத்திய அதிகாரி இந்த உதவி வைத்தியர் அனுமதித்த நோயாளிக்கான சிகிச்சையை அளிக்க மறுப்பதாலும் -*

*மாவட்ட உதவி வைத்திய அதிகாரியான தாங்கள் உதவி வைத்தியரின் சிகிச்சையை உறுதிப்படுத்த மறுப்பதனாலும் - நோயாளிக்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வைத்தியச் சிகிச்சையை அளிக்க முடியாது."*

*(கையொப்பம்)*

*தாதி 4ஆம் வார்ட்*

இப்படித் தாதியின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் பற்றி அக்கரைப்பற்று பொலீஸிலும் மாகாண சுகாதாரச் சேவை அமைச்சின் செயலாளர் அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இரத்த வாந்தியாலும் கடும் காய்ச்சலினாலும் அவதிப்பட்ட சிறுவனின் பெயர் புஹாரி ரினாஸ். சிறுவனை அவனின் ஏழைத்தாய் கடந்த 2ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குக் கொண்டு சென்றார். சிறுவனைப் பரிசோதித்த வைத்தியர் அவனை சிகிச்சைக்காக நான்காம் வார்ட்டில் அனுமதித்தார்.

அங்கேதான் 4மணி நேரம் எதுவித சிகிச்சையும் அளிக்கப்படாமல் சிறுவன் சுருண்டான்; துவண்டான். விடயம் அறிந்து மாவட்ட வைத்திய அதிகாரி திருமதி பஸி லாறியாஸ் பகல் 12.05 மணியளவில் வைத்திய சாலை வார்ட்டுக்கு வந்து சிறுவனைப் பார்த்தார். அவனது கஷ்டமான நிலை கண்டு உடனடியாக அவசர தீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்று அவசர சிகிச்சை அளித்து விட்டு உடனடியாக மேலதிகச் சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வாகனத்தில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

நல்ல வேளையாக மட்டக்களப்பு வைத்தியசாலைச் சிகிச்சையோடு சிறுவன் துரிதகதியில் குணமடைந்தான்.

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அந்தச் சிறுவன் இன்னும் சில மணிநேரம் சிகிச்சையின்றி இருந்திருந்தால் என்ன ஆகும்?

வைத்தியர்களின் காழ்ப்புணர்வுகளாலும் நடைமுறைச் சிக்கல்களாலும் நோயாளிகள் பாதிக்கப்படுவதா? இவைதான் கல்முனைப் பிராந்திய சுகாதாரப் பிரிவில் எங்கும் கேட்கப்படும் கேள்விகள். (ஏ)

# 5,363 குடும்பங்கள் இடம்பெயர்வு மூன்று நாள்களுக்கு நிவாரணம்

நிந்தவூர்,ஜன.19

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் மொத்தம் 5ஆயிரத்து 363 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. ஆயிரத்து 64 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 2ஆயிரத்து 259 வீடுகள் அரைகுறையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 34ஆயிரத்து 272 ஏக்கர் வயல்கள் அழிந்துள்ளன.

அம்பாறை மாவட்ட செயலாளர் எஸ்.எஸ்.சி.சிறிவர்த்தன தலைமையில் அம்பாறை செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கூட்டத்தில் மேற்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச சபை செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மூன்று நாள்களுக்கு உலர் உணவுப் பொருள்களும், இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு மூன்று நாள்களுக்கு, சமைத்த உணவும் வழங்குவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஏ)

### குடாநாட்டில் மீளக்குடியமர்வோரை

# நலன்புரி நிலையங்களில் தங்கவைக்காது சொந்த வீடுகளில் குடியமர்த்த வேண்டும்

## உலக வங்கிக் குழுவிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஜன.18

குடாநாட்டில் மீளக்குடியமரும் மக்கள், நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்படும் நிலை தொடரக் கூடாது. இந்த நிலை மாற்றப்பட்டு அவர்கள் சொந்த வீடுகளில் குடியமரும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

- இவ்வாறு உலக வங்கிக் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

நேற்றுமுன்தினம் காலை யாழ். செயலகத்தில் உலக வங்கிக் குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே. அரச அதிபர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு வாழ்விடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டியுள்ளது. அத்துடன், அவர்களுக்கு குடிதண்ணீர், சுகாதாரம் போன்ற அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை -

கடந்தகால யுத்தத்தின் காரணமாக குடாநாட்டில் அதிக எண்ணிக்கையிலான விதவைகளும், ஊனமுற்றவர்களும் உருவாகியுள்ளனர். இவர்களுக்கான தேவைகளும் பன்மடங்காகவுள்ளன - என்றார்.

குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினை குறித்து இங்கு எடுத்துக் கூறிய 'நியாப்' அமைப்பின் தலைவர் பி.இராமநாதன் அதற்கான வழிவகைகள் விரைவில் ஏற்படுத்தப்படவேண்டும் என்று - கேட்டுக்கொண்டார்.

கடந்தகால யுத்தத்தின் காரணமாகக் குடாநாட்டில் சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரம் வீடுகள் அழிவுற்றுள்ளதாகத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தொடர்ந்தும் மக்கள் இங்கு மீளக்குடியமர்ந்து வருவதால் வீடுகளுக்கான பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்தார்.

அத்துடன், யுத்தத்தின் காரணமாக அழிவுற்ற பாடசாலைகள், ஆலயங்கள், வாழ்விடங்கள் மற்றும் பொதுக் கட்டடங்கள் ஆகியன பற்றி உலக வங்கிக் குழுவுக்கு படங்கள் மூலம் காண்பிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் பிரதேசசெயலர்கள், திணைக்களத் தலைவர்கள்; பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் யுத்தத்தினால் அழிவடைந்த சாவகச்சேரி பிரதேசத்தைப் பார்வையிட்டதுடன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் கலந்து கொண்டனர். (எ-10-5)

# வாழ்வாதாரப் பிரச்சினைகளில் விட்டுக்கொடுப்புக்கு இடமேயில்லை

## மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,ஜன.19

தமிழீழ விடுதலைப் புலிகள் என்றுமே விட்டுக்கொடுப்பான போக்கைக் கடைப்பிடித்து வருபவர்கள். ஆனால், எமது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் எந்தவித விட்டுக் கொடுப்பையும் செய்ய நாங்கள் தயாரில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

கேணல் கிட்டு உட்பட வங்கக் கடலில் காவியமான பத்து மாவீரர்களினதும் 10 ஆம் ஆண்டு நினைவு நாள் வைபவம் கடந்த வியாழன் அன்று மாலை நல்லூர் ஆலய வடக்கு வீதியில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவன் க.றுகுணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களின் ஆரம்ப காலம் தொடக்கம் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்புடனேயே செயற்பட்டுவந்துள்ளனர்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தப்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகி 160 நாள்களுக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டிய 55 சதவீதமான விடயங்கள் இன்னமும் அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

ஆயினும், நாங்கள் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

யாழ்.குடாநாட்டில் 48 பாடசாலைகள், 3 ஆயிரத்து 713 வீடுகள், 38 வியாபார நிலையங்கள், 58 அரச பொதுக் கட்டடங்கள் போன்றவற்றை விட்டு இராணுவத்தினர் இன்னமும் வெளியேறவில்லை. 246 இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் மக்கள் சென்று வழிபடமுடியாத நிலையில் உள்ளன.

சுமார் 33 ஆயிரம் மக்கள், வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர். ஆனால், அவர்களின் வீடுகளிலோ படையினர் குடிகொண்டுள்ளனர்.

எமது மக்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படும்போதே சமாதானமும் சாத்தியமாகும் - என்றார்.

நிகழ்வில் சி.வி.கே.சிவஞானம், அரசியற்துறையைச் சேர்ந்த பாவலன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும்துறைத் தலைவர் கலாநிதி சிதம்பரநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (எ-9-86)

# துண்டி மீனவர் மீளக்குடியமர இதுவரை அனுமதி இல்லை

## மக்கள் விசனம் தெரிவிப்பு

குருநகர்,ஜன.19

கொழும்புத்துறை - துண்டிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இதுவரை தமது வீடுகளில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து துண்டி மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்புத்துறை, துண்டிப்பகுதி மீனவர்கள் கொழும்புத்துறை இறங்கு துறையூடாகச் சென்று குடாக் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மீன் பிடித்தொழிலைத் தொடர்ச்சியாக - எவ்வித சிரமங்களும் இன்றி - மேற்கொள்வதனால் நாம் சொந்த வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

சொந்த வீடுகளில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படாததை அடுத்து, நாம் நாவாலி, வட்டுக்கோட்டை, வானபுரம் பகுதிகளில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நீண்ட தூரபயணத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் தொழில் எமக்கு உடல், உளப்பாதிப்புக்கள் பலவற்றையும் ஏற்படுத்தி விடுகிறது - என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - கொழும்புத்துறை வீதியூடாக இறங்குதுறைக்குச் செல்ல அனுமதிக்கப்படாததினால் தாம் சிரமங்களை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் - மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

# மீளக்குடியமர்ந்தோருக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்

வலி.வடக்கு,ஜன.19

யாழ்.கண்டிவீதி திறக்கப்பட்ட பின்னர் வன்னியில் இருந்து வந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர் குடும்பங்களில் மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் நாளை திங்கட்கிழமை பட்டினிக்கெதிரான இயக்கத்தினால் வழங்கப்படவுள்ளன.

காலை 10 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள ஜே/626, கொக்குவில் மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து ஜே/98, ஜே/99, ஜே/105, ஜே/122, ஜே/125, ஜே/126, ஜே/127 கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கும் -

பிற்பகல் 2 மணிக்கு அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள ஜே/95 அரியாலை மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து ஜே/94, ஜே/95, ஜே/112 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இந்தக் குடும்பங்களுக்கு அன்றாடப்பாவனைக்கான பொருள்கள் பட்டினிக்கெதிரான இயக்கத்தினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-86)

### திருடும் நோக்குடன்

# ஜன்னல் வழியே உள்நுழைந்தவர் கொட்டன் அடிக்கு இலக்கானார்!

சண்டிலிப்பாய்,ஜன.19

பண்டத்தரிப்பு-கீரிமலை வீதியிலுள்ள வீடு ஒன்றில் இரவு வேளையில் திருடும் நோக்குடன் ஜன்னல் வழியாக உட்புகுவதற்கு முயற்சி செய்த இளைஞர் ஒருவர் வீட்டுக்காரரின் தாக்குதலுக்கு இலக்கானார்.

கொட்டன் தடியினால் தாக்கப்பட்டதனால் தலையில் பலத்த காயமடைந்த இவர், சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் கனகரத்தினம் ஜெகதாஸ் என்பவரே தலையில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி வீட்டுக்காரர் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸாரிடம் இவ்வாலிபர் கைவிட்டுச் சென்ற சைக்கிள் ஒன்றும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் நிலையத்தில் இந்தச் சைக்கிள் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். (எ-135)

# இன்றைய வெடிகளும் அன்றைய 'அவுட்டு'களும்

கிட்டத்தட்ட ஒரு வரிசத்துக்கு முந்தி யாழ்ப்பாணத்திலே ஏதேன் சின்ன வெடிச் சத்தம் கேட்டாக்காணும் யாழ்ப்பாணத்தாரெல்லாம் கதவுகள் யன்னல்களெல்லாத்தையும் அடிச்சுப் பூட்டிப் போட்டு மூச்சுக் கூட விடாமை கடவுளைக் கும்பிட்டுக் கொண்டிருப்பினம். சத்தம் நிண்டாப்பிறகு மெல்லமா யன்னலைத் துறந்து பாத்திட்டு றோட்டிலை பிரச்சினை இல்லையெண்டா கதவைத் துறந்து மெல்லமா எட்டிப் பாத்திட்டு றோட்டு அமைதியாக் கிடந்தா மெல்லம் மெல்லமா பயந்து பயந்து றோட்டில காலை வைப்பினம். றோட்டால போற வாற வாகனங்களும் சத்தம் வந்த பக்கத்தை விட்டிட்டு வேற பாதையால போகும்.

இண்டைக்கு நிலைமை அப்படியில்லை. ஆமிக்காறன்ரை சென்றிக்கு முன்னாலையே வெடியைக் கொளுத்திப் போடுறாங்கள் எங்கடை மறத்தமிழ் பெடியள். அது மட்டுமே, வீட்டு மதிலுக்கு மேலாலை, வீட்டுக் கூரைக்கு மேலை எல்லாம் வெடியைக் கொளுத்திப் போடுறாங்கள் எங்கடை பெடியள். கூரைக்கு மேலை எண்டவுடனை அவேன்ரை வீட்டுக் கூரைக்கு மேலை எண்டு நீங்கள் நினைக்கப்படாது. பக்கத்து வீட்டுக் கூரைக்கு மேலை தான் எங்கடை பெடியள் வெடியைக் கொளுத்தி எறிவாங்கள். அதோடை றோட்டால போறவாறவையின்ர சைக்கிளுக்குக் கீழை சிலநேரம் ஆக்களுக்கும் எறிவினம். இதுகளையெல்லாம் நீங்கள் கண்டுகொள்ளப்படாது.

வெடிச் சத்தத்தைக் கேட்டு நித்திரையாய்க் கிடக்கிற குழந்தைப் பிள்ளையள் அதிர்ச்சியில திடுக்கிட்டு முழிக்குதுகள். வாணம் விடுறதாலை கண் பார்வை போட்டுது; பாங்க் கூரை எரிஞ்சு போச்சு எண்டெல்லாம் நீங்கள் வாய் துறக்கப்படாது. பிறகு தெரியுந்தானே எங்களைப் பற்றி.

இப்பத்தைப் பெடியள் என்ன நாங்கள் விட்ட வாணங்களை விட, கூடவே விடுகினம். ஆக ஈக்கு வாணத்தைத் தான் இப்பத்தைப் பெடியளுக்குத் தெரியும். வாணம் விடுறது எங்கடை பண்பாட்டோடை பின்னிப் பிணைஞ்ச ஒண்டு. அந்தக் காலத்திலை நாங்கள் விட்ட அவுட்டுகள், வாணங்களைப் பற்றி உங்கினேக்கை பக்கத்திலை ஆறேன் நைன்ரியள் இருந்தாக் கேளுங்கோ சொல்லுவினம்.




அம்மன் கோயில்லையும், ஐயனார் கோயில்லையும், காத்தவராயர் கோயில்லையும் நாங்கள் விடாத அவுட்டுகளையே இப்பத்தைப் பெடியள் விடுகினம். அவுட்டு விடுறத்திலையும் எக்ஸ்பேர்ட்டுக்கள் இருந்தவை அந்தக் காலத்திலை. திருவிழாக்காறரும் ஏட்டிக்குப் போட்டியா அவுட்டு விடுற ஸ்பெஷலிஸ்டுக்களை கூட்டியந்து அவுட்டு விடுறவை.

அவுட்டு விடுறதும் சும்மா எண்டே நினைக்கிறியள். மரத்திலை கொட்டுச் செய்து அந்தக் கொட்டுக்கிள்ளை வைச்சுத்தான் அவுட்டு விடுறது. பூங்காவனத் திருவிழா எண்டா சுவாமி வடக்கு வீதிக்கு வந்தவுடனை வடக்கு வீதியிலை வைச்சுத் தான் அவுட்டு விடுறது. சாமம் ரண்டரை மணிக்கு அவுட்டு விடத்துவங்கினா நாலு மணியாகும் அவுட்டு விட்டு முடியிறதுக்கு. அதுக்குப் பிறகுதான் சுவாமி அங்காலை நகரும். சாமம் ரெண்டு மணிக்குப் பிறகு சனங்கள் நல்ல நித்திரையாக் கிடக்கேக்கை நாங்கள் விடுகிற அவுட்டுகளின்ரை சத்தத்தைக் கேட்டு மூண்டு நாலு கட்டைக்கு அங்காலையிருக்கிற சனங்கள் கூட நித்திரையாலை முழிச்சிடும்.

ஆனா, எனக்குள்ள கவலை என்னண்டா உந்த வெடியளைக் கொளுத்தி மதிலுக்கு மேலாலை போடுற பெடியளும், பழசுகளின்ரை சைக்கிள் காலுக்குள்ளை போடுற வீரர்களும், கண்ணுக்குள்ளை ஈக்கு வாணம் விடுறவையும் ஆளுக்கு ஒவ்வொரு கிறனைட்டை எறிஞ்சிருந்தா அல்லது லோஞ்சரிலை வைச்சு கிறனைட்டை அடிச்சிருந்தா எப்பவோ நாங்களெல்லாம் நிம்மதியா இருந்திருப்பம். ஆனா எங்கட பெடியள் அதுக்கெல்லாம் வரமாட்டாங்கள் பாருங்கோ. அவங்கடை லட்சியமெல்லாம் கனடா, லண்டன் எண்டுதான்.

உதயன் பேப்பறிலை சிலபேர் எழுதுகினம் புலியள் வெடியைத் தடை செய்யவேணுமெண்டு. நானும் சொன்னான். வெடிக்கு இருநூறு வீத வரி விதிக்கச் சொல்லி. நான் அப்ப அப்பிடிச் சொன்னது பிழையெண்டு இப்பதான் உணருகிறேன். வெடிக்கு வரிவிலக்கு அளிக்க வேணுமெண்டு அனைத்துத் தமிழீழ மக்களின் சார்பிலையும் கோரிக்கை விடுறன். அதோடை இன்னொரு விசயம் போன மாதம் வடக்கு தெற்கு நட்புறவுப் பாலம் என்று கொஞ்சச் சிங்களப்பெடியள் வந்து சென்.சாள்ஸ் பள்ளிக்கூடத்திலை காராட்டி காட்டினவை நான் புல்லரித்துபோனன் பாருங்கோ. பன்ரண்டு பதின்மூன்று வயதுப் பொடியள் ரெண்டு பேர் ஓடுகளையெல்லாத்தையும் உடைச்சுத் தள்ளினாங்கள்.

நாங்கள் கட்டபொம்மன் பரம்பரை எண்டதை அடுத்த நிகழ்ச்சியைப் பாத்தேப் பிறகுதான் புரிஞ்சு கொண்டன். ஜாக்சன் துரை எண்ட வெள்ளைக்காரன் கட்டபொம்மனைப் பார்த்து சொன்னான். சூரியன் கூட எம்மை கேட்டுத்தான் எழும், விழும் எண்டு. அதற்கு கட்டபொம்மன் சொன்னான் நமது நாட்டில் ஒரு பெண் செய்யும் வேலை என்று. அது மாதிரி சிங்களப் பெடிப்பிள்ளைகள் ஓடு உடைச்சதைப் பார்த்து வாயை பிளந்து கொண்டு இருந்த எனக்கு உதென்ன சிங்களப் பெடிப்பிள்ளைகளின்ரையை பார்த்து ஆவண்டுறாய் இந்தா எங்கடவித்தையைப்பார் என்று சொல்லுற மாதிரி இரண்டு பெட்டையள் ஏறினாளவை மேடையிலை சிங்களப் பெடியளை விட இரண்டு மூன்று வயது குறைய இருக்கும். அந்த மாதிரி வெளுத்து வாங்கினாளவை சிலம்பம், கராட்டி என்று. எனக்கு உடனை முறத்தாள் புலியை விரட்டிய சங்கத்தமிழ் பெண்ணின் ஞாபகம்தான் வந்தது.

**பரதேசி**

பிறகுதான் தெரிஞ்சுது அந்தப் பெட்டையள் இரண்டு பேரும் பாதை திறந்த பிறகு வன்னியிலை இருந்து வந்து பள்ளிக்கூடத்திலை சேர்ந்தவையளாம். வன்னியிலை கலைக் கல்லூரி என்று ஒண்டு இருக்காம் அதிலைதான் இந்தப்பெட்டையள் இரண்டு பேரும் கராட்டியும் சிலம்பமும் பழகினவையாம். கிட்டத்தட்ட இருபத்தைந்து வருசத்துக்கு பிறகு சிலம்பம் பாக்கிறதுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதிலை எனக்கு பெரிய சந்தோசம்.

நான் புலிகளிட்டை முன்வைக்கிற அடுத்த கோரிக்கை என்ன எண்டால் எங்கட பாரம்பரிய கலாசார விழுமியங்களை பேணுறது எண்டால் இந்தக் கலைக் கல்லூரியிலை வாணம் விடுறது, வெடிகொளுத்துறது, அவுட்டுவிடுறது இதுகளையும் ஒரு பயிற்சி நெறியாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். ★

# யாழ்ப்பாணக் குடாநாடு மீது இராணுவம் தன் ஆதிக்கத்தைத் தொடர முயல்கிறதா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் ஒரு சமாதானச் சூழலில் இராணுவம் இதற்குள் முந்திரிக்கொட்டைத்தனமாக மூக்கை நுழைக்கப் பார்க்கிறது. இது அமைதி, சமாதானம் வேண்டியா அன்றி சமாதானம் சீர்குலைக்கப்படவேண்டும் என்பதற்காகவா என்பதே தமிழ்மக்களிடம் இன்று எழுந்துள்ள முக்கிய வினாவாகும்.

வடக்கு-கிழக்கில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் நம்பத்தகுந்தவர்கள் இல்லையென உலக வங்கி கூறியுள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்திருக்கிறார். இவ்வேளையில், யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வீடு வீடாக புள்ளிவிவரம் சேகரிப்பதும் கிராம அலுவலர்கள்மூலம் புள்ளிவிவரங்களைப் பெற்றுக்கொள்வதும் எதற்காக?

## புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுவது ஏன்?

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுமா? அல்லது நிம்மதியை ஏற்படுத்துமா? இலங்கையில் அடிப்படை புள்ளிவிவரங்களை சேகரிப்பவர்கள் கிராம அலுவலர்களே. இத்தகைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு கிராம அலுவலர்களின் புள்ளிவிவரம் பிழையானது என்று உலக வங்கி கூறுமாக இருந்தால், அது வடக்கு-கிழக்கில் உள்ள உயர் அரச அதிகாரிகள் கொடுத்த ஒரு தகவலாகவே இருக்கமுடியும். இல்லையெனில் அவ்வாறான ஒரு குற்றச்சாட்டு எழுவதற்கு நியாயமில்லை.

*வில்லவன்*

இதேபோன்று இராணுவத்தினருக்கும் இத்தகைய ஒரு தகவல் கொடுக்கப்பட்டிருக்கலாம். தமது சுய லாபங்களுக்காகவும் பதவி ஆசைக்காகவும் அவர்கள் இத்தகைய ஒரு செயலில் ஈடுபட்டிருக்கக்கூடும். அதன் மூலம் இராணுவத்தை இதில் ஈடுபடச் செய்யலாம் என்பது அவர்களது நோக்கமாக இருந்திருக்கக்கூடும்.

தற்பொழுது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் புள்ளிவிவரச் சேகரிப்பில் 12 வயதிற்குட்பட்டவர்களின் விவரங்களை - அதாவது, 95ஆம் ஆண்டில் வசித்தவர்கள், தற்போது வசிப்பவர்கள் என்று தரம் பிரித்து விவரங்களைச் சேகரிப்பது பலராலும் சிந்திக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

பேச்சுக்கள் தோல்வியடைந்தால் எதிர்காலத்தில் புலிகளுடன் இணையலாம் என்று கருதக்கூடிய ஒரு தலைமுறையின்மீது கண்வைப்பதற்காகவும் -

தற்போது களத்தில் இருக்கும் புலிகள் எக்காலத்தில் அந்த அமைப்பில் இணைந்தவர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் இராணுவம் இந்தத் தகவல்களைச் சேகரிக்கக்கூடும்.

எதிர்காலத்தில் அத்தகைய வயதினர்மீது கைவைத்து மீண்டும் ஒரு செம்மணியை இராணுவம் ஏற்படுத்தக்கூடுமா என்பது பற்றியும் நாம் இங்கு கவனத்திற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் மீது தனது ஆதிக்கத்தைக் காட்ட இராணுவத்தினர் மீண்டும் முனைப்புக் கொண்டுள்ளனர் என்பதையே அவர்களின் தற்போதைய செயல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கடந்த சில நாள்களாக இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று புள்ளிவிவரம் எடுத்தல் மற்றும் கிராம அலுவலர்களின் அலுவலகங்கள், வீடுகளில் காவலிருந்து புள்ளிவிவரங்களை உடன் தரும்படி பணித்தல் என்பன இதனையே காட்டுகின்றன.

யாழ்மாவட்டம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினரே இந்த மண்மீதான சிவில் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்துவந்தார்கள். 1996 மேயில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியபோது இன்முகம் காட்டி வரவேற்று, அரிசி கொடுத்த இராணுவம், 1996ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமற்போவதற்குக் காரணமாக இருந்தது என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

அந்தவகையில் நடந்துகொண்ட இராணுவம், படிப்படியாக யாழ்ப்பாணத்தில் தனது மேலாதிக்கத்தை முழுமையாகக் கொண்டிருந்தது. சிவில் நிர்வாக செயற்பாடுகள், நடவடிக்கைகள் யாவும் இராணுவத்தினரின் கைகளிலேயே தங்கியிருந்தன.

தெரிந்தோ, தெரியாமலோ உறவினர், நண்பர்கள் வீடுகளில் படைமுகாம்களில் பதியாமல் நிற்கும் போது இராணுவம் சுற்றிவளைத்தால் அதற்குள் இருப்பவர் புலி என முத்திரை குத்தப்பட்டு வீட்டு உரிமையாளரும் ஏனையவரும் முகாம்களுக்கு அலையவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஒருகாலத்தில் இங்கு இருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

அதுமாத்திரமன்றி வீடுகளில் இருப்பவர்கள் யார் என்ற பெயர்ப்பட்டியல் இராணுவத்திடம் கொடுக்கப்பட்டு அவர்களிடம் கையொப்பம் பெற்று அனுமதி பெற்றால் மட்டுமே சொந்த வீட்டில் குடியிருக்கமுடியும் என்ற நிலையும் காணப்பட்டது.

சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள், சுற்றிவளைப்புக்கள், திடீர்ச் சோதனைகள், உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டங்கள் என்று இம்மண்ணிலுள்ள மக்களின்மீது பல்வேறு வழிகளிலும் இராணுவ ஆதிக்கம் திணிக்கப்பட்டு வந்தது.

முன்னைய அரசு மற்றும் ஜனாதிபதி உட்பட ஆயுதங்களைக் கைவிட்ட தமிழ்க் கட்சி சிலவும் இதற்குத் துணைநின்றன.

ஜனநாயகம், விடுதலை என்பவையெல்லாம் இக்காலத்தில் இராணுவ நடவடிக்கையின் முன் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட விடயங்களாகவே காணப்பட்டன.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தற்போதைய அரசிற்கும் இடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பேச்சுக்கள்மூலம் இம்மண்ணில் மக்களின் மீதிருந்த இராணுவ ஆதிக்க வலிமை படிப்படியாக இராணுவத்திடம் இருந்து விடுபடத் தொடங்கியது.

இராணுவக் கெடுபிடி இம்மண்ணில் இருக்கும்போது சிவில் சேவை உத்தியோகத்தர்கள் என்று கூறிக்கொண்டு ஒருசில அரச உத்தியோகத்தர்களும் மக்களின் நலனில் அக்கறை கொள்ளவில்லை என்பது இங்கு அதிகம் கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

ஆனாலும், இத்தகைய உத்தியோகத்தர்கள் தற்போதும் இராணுவம் எடுக்கும் புள்ளிவிவரங்களுக்கு முண்டு கொடுப்பவர்களாகவே இருக்கின்றனர். இராணுவம் கேட்டால் புள்ளிவிவரம் கொடுக்கவேண்டும். மறுத்து எதுவும் செய்யமுடியாதுதானே என்பது அவர்கள் கூறும் காரணம்.

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள், அபிவிருத்தி முயற்சிகள் என்பன தற்போது இடம்பெற்ற வருகின்றன. இம்மண்ணில் சிவில் நிர்வாகம் மீளக் கொண்டுவரப்பட்டுவிட்டது என்று கூறிக்கொண்டு இந்த உயர் அதிகாரிகள் இராணுவத்தின் இத்தகைய செயற்பாட்டைத் தடைசெய்ய இன்றுவரை முனையவில்லை. அது ஏன் என்பதும் புரியவில்லை.

கிராம அலுவலர்கள் தமது நிலைமையை உயர் அதிகாரிகளுக்கு கூறியபோதிலும் யாரும் இது சம்பந்தமாக இராணுவத்துடன் கதைப்பதற்குத் தயாராக இல்லை என்பது அவர்களின் கவலை.

வீடுகளுக்குச் செல்லும் இராணுவம் அவர்களுக்கு விளங்காத மொழியில் தகவல்களைச் சேகரித்து வருகின்றது. இதேபோன்று கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் செல்லும் இராணுவத்தினருக்கும் பல கிராம அலுவலர்களுக்கும் இடையிலும் மொழிப்பிரச்சினை ஏற்படுகின்றது. இந்நிலையில் சரியான- தெளிவான - விவரங்களை இராணுவத்தால திரட்டமுடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி.

தற்போது இராணுவத்தினால் திரட்டப்படும் புள்ளிவிவரம் எதனைக் காட்டுவதற்கு அல்லது எதனைச் செய்வதற்குப் பெறப்படுகிறது என்பதும் இராணுவத்தால் இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. தற்போது இராணுவம் பெறும் புள்ளிவிவரம் அமைதியை ஏற்படுத்துமா? அல்லது மீண்டும் வடக்கு - கிழக்கில் புயல் வீசப் பயன்படுத்தப்படுமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ★




பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திடைந்த சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை அண்மையில் கெளரவித்தது. இந்த விழாவில் சங்க உறுப்பினர் ஒருவரின் மகனான யோநாதன் கார்த்தீபனை வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சின்னத்தம்பி மாலை அணிவித்து கெளரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-173)




'உதயன்' அனுசரணையுடன்
தமழ் தொலைக்காட்சி இணையம் (ரீ.ரீ.என.)
நடத்திய மாவீரர்தின கவிதைப் போட்டியில்
பரிசினை வென்ற கவிதைகள் இன்றைய
'கவிதைக் கணங்களை...'
நிறைக்கின்றன.

## தமிழீழப் போராட்ட வரலாறு

அடக்கு முறைக்கன்று அஹிம்சை சொல்லித் தோற்றதனால்
விடுதலைப் போராட்டம்
விதைதிறந்து முளைத்தின்று
'அடிமுடி' அளக்கவொண்ணா அனற்பிளம்பாய் மாறிற்று
'ஒளிக்கடவுள்' போல ஒருவன்
பிறந்துவந்தான்.
கொழுந்து விடும் 'புரட்சிக் கூத்தை'த் தொடக்கி வைத்தான்.
அவிசொரிய வல்ல 'அணி' வகுத்தான்
போரியலில்
கவித்துவங்கள் செய்தான்
கடலை, தரை, வானைக்
கடைந்து விடிவென்னும் 'அமுதம்' பெறநிமிர்ந்தான்.
உடைந்த 'விலங்கு' ஒன்றல்ல.... ஒரு நூறு!
அடைந்த இலக்குகளுக்கு அளவேது?
உயிர்கொடுத்து
நிமிர்ந்த இளம்பூக்கள் நிலஞ்சிவக்க வீழ்கையிலும்....
தமிழ் உயிர்த்ததென்று தாயகத்தாள் பூரித்தாள்.
"தமிழன் தகுதியானோன்" காலதேவன் தீர்ப்பளித்தான்.
சாபம் இடத்துணிந்த 'பல'முனிகள்
எழுச்சிகண்டு
"வாழ்க" எனப்பாடும் வரலாறு தோன்றிற்று.
வெட்ட வெட்டத் தளைக்கும் வேதியல்கள்
எதிரிகளை
"முட்டிப் பயனில்லை" என முழிக்க வைத்துளது
கொடுத்த விலைக்குக் குனிந்து,
'சரிசமான'
விடிவுக்கு வெள்ளை உடை பூண்டு பயணங்கள்
தொடர்கிறது! ஏய்த்துப் பேய்க்காட்டித் 'தாகத்தை
அடக்க முடியாது' அவனி புரிந்துளது.
இந்த உயர்வுக்கு ஏணிகளாய்; எங்களது
'சந்ததிகள் ஞானம் பெற' வைத்த போதிமரக்
கன்றுகளாய்; சாவைக் கடித்துண்டுங் கொள்கைகாத்த
குன்றுகளாய்....'
இந்தக் குளிர்காலக் கார்த்திகையில்......
தீபங்கள் ஏற்றத் திருமுகத்தைக் காட்டுகிற
தேவர்களாய் வாழும் மாவீரர் நினைவுகளை
நெஞ்சில் இருத்திவைப்போம்!
நிசவிடிவைக் காதலிப்போம்!!

- அருணன்.
(இரண்டாம் பரிசு பெற்ற கவிதை)

## தமிழீழப் போராட்ட வரலாறு

குட்டியாடொன்றைச் சிங்கக் கூட்டினில் அடைத்து வைத்து
ஒற்றுமையாக நீங்கள் உவகையாய் வாழ்வீர் என்று
விட்டுத்தன் நாடு சென்ற வெள்ளையர் சொன்ன கூற்றை
மெய்ப்பிக்க எண்ணினாரெம் வித்தகத் தலைவர்மார்கள்.

எம்மினத் தலைவர் தம்மை ஏற்றினர் தோள்மேல்அன்று
சொன்னதை வேதமாக 'தோத்தரித்தார்கள் நன்று
எண்ணியே புளகம் ஆனோம், 'எமக்கென்ன
குறை'யென்றார்த்தோம்
கண்ணிரண் டொன்றாய்க் காட்சி காணவே விழைந்தோம்
உண்மை.

சிங்கத்தின் பார்வை ஆட்டைத் தீர்த்திடும் நோக்கில் செல்ல
சிங்களச் சட்டம் அஃதைக் கொன்றிடும் எண்ணம் கொள்ள
ஐம்பத்தெட்டாண்டு தொட்டு அடிக்கடி குதறிக் கொல்ல
எம்மவர்க் கிந்தக் கூடு இயைபில்லை எனவு ணர்ந்தோம்.

கூட்டினை உடைக்கும் எண்ணக் குருத்தொன்று
வளர்ந்து நாளும்
காட்டிடை விருட்சமாக காளையர் காலாய் நின்றார்
போர்ப்பறை காதில் வீழ பொங்கினார் தமிழர் வேற்று
நாட்டினர் வியந்து நோக்க வளர்ந்தது ஈழத் தாகம்.

போட்டனர் தடைகள்; சுட்டுப் பொசுக்கினர் தமிழர் தம்மை;
வீட்டொடு உடைமை யாவும் வீதியிற் சாம்பலாக
ஆக்கினர்;-பெண்கள் மானம் அழித்தனர்; கொடுமை கண்டு
ஆர்த்தெழும் வேங்கைக் கூட்டம் ஆனது கவசம் ஆக.

சின்ன வயது தன்னில் சிலிர்த்திடும் ஆசை நீக்கி
தம்மையே யோகியாக்கி தமிழர் தம் மானங் காக்க
எண்ணியே புலிகள் சேனை இணைந்து மாவீரர் ஆனோர்
திண்ணமாய் நாளை ஏட்டில் தீரத்தின் வரலாறாவர்!

- புத்தூர் வே. இளையகுட்டி.
(முதற் பரிசு பெற்ற கவிதை)

## தமிழீழப் போராட்ட வரலாறு

"போரென்றால் போர்"
நிலையைப்
பொறுக்கமாட்டாமல்
ஓர் ஊற்றுப் பொங்கியது
போர் ஊற்று!
புதிதாய் மண்ணில்
பாய்ந்தோடிற்று
அவ்வூற்றில்
வீரம் விளைந்ததும்
தீரம் செறிந்ததும்
வேங்கைக் கொடியினில்
வெகுண்டவர் எழுந்ததும்
தேசவரலாறு!
திசைகள் புரிந்துள்ளன
நீலக்கடலில்
நீந்தி விளையாடும்
ஈழக்குழந்தை
ஒருவருக்கே உரிமையெனும்
பேரினவாதத்தில்
தேனாட்டின் நீறாதல்!
இனவாத விதைவிழுந்து
முளைகொண்டு
ஆழவேர், பரப்பி
அகலக் கிளை விரித்து
தேசம் முழுதும்
கருமை கவிழ்த்தாற்றி
நீசப்போர் நெருப்பிற்கு
நெய்யூற்றிக் கிடக்கிறது
யுத்தக் கனல்
கக்கும் கருவிகளின்
சத்தம் ஓயவில்லை
சிலபொழுதில் முகங்காட்டும்
சமரசமும் நீளவில்லை.
புத்திரமாய் உயிர்காக்கும்
பிடிப்போடு தமிழர்குலம்
எண்திக்கும் பறந்துளது.
கூடில்லாப் பறவையது
"கூடாது இது" வென்று
போராடும் அல்லது
புயல்பூமியில் வாழும்
பாதங்கள் இன்னமும்
குருதிவெள்ளத்தில்
புதைந்துள்ளன.
மறுக்கப்படமுடியாதவை
மறுக்கப்பட்டதால்
வெறுப்பெழுந்தது.
வெங்களம் விரிந்தது.
செங்கள வெற்றிகள்
செந்தமிழ்த்தாயை
'சரியாசனத்தில்' ஏற்றின
கண்ணீரும் வியர்வையும்
கல்லறையும் குருதியும்
மண்வரலாறு எழுதின.
போரின் கொடுமைகளை
எம்மண்ணின்
புல்லும் சிறுபூவும்
சொல்லும்.
குருதி வரலாற்றுக்
கோலத்தைப் பூர்த்திசெய்யக்
காலம் துடிக்கிறது.
தற்போது
பொற்காலம் புலர்ந்துள்ளது
"புரிந்துணர்வோம் நாமெ"ன்று
ஈனமும் எண்ணும்
பொற்காலம் புலர்ந்துளது
புதிய தாரிகை கொண்டு
அழகிய நாடு எழுத
இளைஞரெல்லாம் இனியெழுக!
யுவதியரும் இணைந்திடுக!
எவரும் எவரையும்
ஆளமுடியாத
எவரும் எவரையும்
அடக்கமுடியாத
சுதந்திர தேசத்தின்
சுகந்துய்க்கும் காலமிது!
ஆயிரம் ஆயிரம்
மாவீரர் குருதியிலே
ஏற்றிவைத்த தமிழ்த்தீபம்
உலகமெலாம் ஒளிகாண
வழிசெய்வோம்!
காற்று இன்னும்
இரகசியமாய்க்
காவியுள்ள போர்க்கீதம்
உறங்கட்டும்!
நேற்றைய வரலாறு
நெஞ்சங் கொள்வோம்!
நாளைய நம்தேச
வரலாற்றை
இன்றேயெழுதுவோம்
ஒளிக்கிரணங்களினால்!

- ச. சாரங்கா.
(மூன்றாம் பரிசு பெற்ற கவிதை)

# யாழ்நகரில் அடையாறு லக்ஷ்மணன்

**யாழ்நகரில் வீரசிங்கம் மண்டபத்தல் இன்று நடைபெறவிருக்கும் பரத நாட்டிய அரங்கேற்றத்தில் கலந்துகொள்ள வருகைதரும் பரதக்கலை விற்பன்னர் அடையாறு லக்ஷமணன்,- குடாநாட்டு பரதக் கலைக்கு ஆற்றிய பங்கு பற்றிய ஒரு சிறு குறிப்பு இது.**

பரதநாட்டியம், நட்டுவாங்கம், சங்கீதம், 'மிருதங்கம் இவற்றிலே கலாஷேத்திரப் பட்டம் பெற்ற பரதக்கலை விற்பன்னர் அடையாறு லக்ஷ்மணன் ஆவார். இவர் 1969 'பரத சூடாமணி' என்ற நாட்டிய நிறுவனத்தை அடையாறில் ஆரம்பித்து பரதக்கலை வளர்ச்சிக்கு பெரும்பங்கினை ஆற்றி வருபவர். இவருடைய நாட்டிய நிறுவனத்தில் பயின்ற பல யாழ்ப்பாணத்துப் பெண்மணிகள் இன்றும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், வெளிநாடுகளிலும் பரதக்கலையை வளர்ப்பதிலே பெரும் பங்காற்றிவருகிறார்கள்.

ஆரம்பத்தில் திருமதி விமலா யோகநாதன், துவாரகா கேதீஸ்வரன், மேனகா ஸ்ரீகுமார், மங்கையற்கரசி ஆள்வாப்பிள்ளை, ஜெயபத்மினி சின்னத்துரை, ரஞ்சினி குணரட்ணம், போன்றோர் இவரிடம் பயின்றவர்கள். இதனைத்தொடர்ந்து ஆய்வாளர், சாரதாதேவி விநாயகராசா, வைஜெயந்திமாலா சீனிவாசகம் போன்றோர் இங்கு பயின்று டிப்ளோமா பட்டம் பெற்று யாழ்ப்பாணம் திரும்பி பரதக்கலை வளர்ப்பதில் ஈடுபட்டார்கள். 1972இல் இவருடைய சிஸ்யைகளான செல்வி வைஜயந்திமாலா சீனிவாசகம், சாரதாதேவி விநாயகராசா (திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா) என்பவர்களின் அரங்கேற்ற நிகழ்வுக்காக லக்ஷ்மணன் அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். அரகேற்ற நிகழ்வுகளை அடுத்து இவருடைய மாணவியான ஆய்வாளரின் பரத நாட்டியக்கச்சேரிக்கு நட்டுவாங்கம் செய்ய இருந்தபோதிலும், நட்டுவாங்கம் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டதால் அன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

அவருடைய வருகையை ஒட்டிய சந்திப்பின்போது அவர் கூறிய சில கருத்துக்கள் வருமாறு:-



"....குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு ஏராளமானவர்கள் இலங்கையில் இருந்து வந்து தன்னிடம் நடனம் பயின்றுள்ளார்கள் என்று பெருமையோடு சொன்னார். இங்கு என் மாணவியரை விட கொக்குவில் கலாபவன மாணவியினரின் நடனத்தைப் பார்த்தேன். வித்தியாசம் நிறைய உண்டு. ஆனால் மக்கள் விரும்பி ரசிக்கிறார்கள். மக்கள் இரசிக்ககூடியதாக இருந்தால் சரி. இந்தியாவில் நடனம் பயில்வதற்கு ஒரு குடும்பத்தில் பெற்றோர் விரும்புவர்; குழந்தை விரும்பாது; அன்றி பெற்றோரில் ஒருவருக்கு விருப்பம் இருக்காது, ஆனால், இலங்கையில் குடும்பத்தில் அனைவருமே இதில் ஈடுபாடு கொண்டுள்ள சிறப்பான ஒரு நிலையை நான் கண்டேன்.

பரத நாட்டியத்தில் பந்தணை நல்லூர் பரம்பரை பாணிக்கும், வழுவூர் பரம்பரை பாணிக்கும் வித்தியாசம் உண்டு. பந்தணை நல்லூர் பாணியைத்தான் கலாஷேத்திரத்தில் ஸ்ரீமதி ருக்குமணிதேவி அவர்கள், இன்னமும் சற்று விரிவாக்கியுள்ளார்கள். மக்கள் விரும்பும் வகையில் ஜனரஞ்சகமாக அமைப்பதில் தவறில்லை. புதுமைகள் நிறையவேண்டும். ஆனால் அவை அடிப்படையினின்றும் மாறுபட்டு விடாது சாஸ்திரோத்தமான முறையில் அமைய வேண்டும்...... மாணவியருடன் குருவும் சேர்ந்து ஆடுவதில் தவறொன்றும் இல்லை. கலாஷேத்திரத்தில் நானும் ஆடியிருக்கிறேன். ..... கிராமிய நடனங்களும் சாஸ்திரியமானவைதான். அவற்றையும் சேர்த்து கதம்ப நிகழ்ச்சிகளை நிறைய அமைக்கவேண்டும்...... வெளிநாட்டுப பயணங்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வோர் அனுபவம்..... கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு எல்லாம் எனக்கு தெரிந்தவற்றை நிறையச்சொல்லிக் கொடுத்து பலரை உருவாக்க வேண்டும் என்பதே என் ஆசை....."

இவருடைய வருகையும், இவருடைய மாணவிகளுடைய நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்த யாழ்ப்பாண நடன ஆர்வலர்கள் பலர் இவருடைய நாட்டியப்பள்ளியில் நாட்டியப் பயிற்சி பெறுவதற்காக தொடர்ந்து வந்த காலப்பகுதியிலே செல்லத் தொடங்கினர். இந்த வகையில் இதனைத் தொடர்ந்து சாந்தினி சிவநேசன், ஜெகசொரூபி, ரஜனி என்பவர்கள் பரத சூடாமணியில் பரதநாட்டியம் பயின்று டிப்ளோமா பட்டம் பெற்று திரும்பினர். இக்காலகட்டத்தில் அரசாங்கப் பாடசாலைகளில் நடன ஆசிரியர் நியமனத்துக்கு பரத சூடாமணியின் டிப்ளோமா சான்றிதழ்களும் அங்கீகரிக்கப்பட்டமையால் (வீரமணி ஐயரின் - பரிந்துரையின்படி) பின்னைய காலங்களில் தொடர்ந்தும் பலர் இந்நிறுவனத்தில் பரதக்கலை பயிலச்சென்றனர். ஏற்கனவே பட்டம் பெற்றவர்களும் புதிய புதிய உருப்படிகளைக் கற்பதற்காக மீண்டும் சென்றனர். இதனால் அடையாறு லக்ஷ்மணனுடைய மாணவ பரம்பரையும் அவருடைய பணியும் யாழ்ப்பாணத்தில் சிறப்பு பெற்று உருவாக வழிவகுத்தது எனலாம்.

- கிருஷாந்தி இரவீந்திரா.



நாட்டிய கலாகேந்திரா வழங்கும் செல்வி துஸ்யந்தி இரவீந்திராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்த நிகழ்வில் பரதக் கலை விற்பன்னர் அடையாறு கே. லஷ்மணன் கலந்துகொள்கிறார்.

செல்வி துஸ்யந்தி யாழ். கொமர்ஷல் வங்கி முகாமையாளர் இரவீந்திரா - திருமதி கிருஷாந்தி இரவீந்திரா தம்பதிகளின் புதல்வி ஆவார். இவரது நடனத் தோற்றம் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

ஓம் விராட் விஸ்வப் ப்ரஹ்மனே நமஹ
வாடிக்கையாளர்களே, நண்பர்களே
உங்களுக்கொரு நற்செய்தி

# சிவா ஜுவலா

ஆபரணத் தொழில் அகம்
126, கண்டி வீதி, சாவகச்சேரி

மேற்படி எமது தொழில் ஸ்தாபனமானது இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருநாளன்று பகல் 11மணி முதல் 12 மணிவரை உள்ள சுபவேளையில் மீண்டும் முன்பு இருந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

வி.எஸ். தங்கராசா,
ரீ.ஜெகன்
(13316) உரிமையாளர்கள்

## 6ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மடிக்கு 28 - 04 - 1974



மண்ணுக்கு 19 - 01 - 1997

செல்வன் சிவகுரு ஜெயக்குமார்
### கப்டன் சாரங்கன் [வெள்ளை]

வீட்டினை மறந்து நாட்டினைக் காக்க
வீறிடும் புலியின் அணியிலே நின்று
ஆற்றிடும் சேவையால் மட்டுவிலூரில்
காற்றிலே கரைந்து காவியமானாய்
வீரவேங்கை வெள்ளை எனும் சாரங்கா
பெற்ற தாய்க்குப் பெருமை சேர்த்தாய்
போற்றிடும் உன்னை ஊரும் உலகும்
தேற்றுகின்றோம் உன் திறமை மெச்சியே.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.
மட்டுவில். (சி-26104)

## தையற் பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு,ஜன.19

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் தொழில் திணைக்களத்தால் நடத்தப்படும் தையற்பயிற்சி வகுப்பு நாளை திங்கட்கிழமை காலை முதல ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கொக்குவில் மேற்கு, ஆனைக் கோட்டை வீதியில் அமைந்துள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 13ஆம் கிளையின் மேல்மாடியில் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

உரிய மாணவிகளை வகுப்புகளில் கலந்துகொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (எ-86)

## 19 பல்கலை மாணவர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு,ஜன.19

ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழக மாணவர் விதானகே சமந்தவின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த 19 மாணவர்களும நிபந்தனையின் பேரில் கடந்த வியாழன் அன்று விடுவிக்கப்பட்டனர்.

எதிர்கால விசாரணைக்குத் தேவையானால் மீண்டும் கைது செய்யப் படுவார்கள் என்ற நிபந்தனையின் பேரிலேயே இவர்களை கங்கொடவில நீதிமன்றம் விடுவித்தது. (ஒ)

### தேவை

யாழ்ப்பாண உணவுவகைகள் திறம்படச் சமைக்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் சமையலாளர், மலசல கூடம் சுத்திகரிப்பவர், பூந்தோட்டம் பராமரிப்பவர் தேவை.
தொடர்பு: இல.40, கண்டி வீதி, சுண்டுக்குளி
(இலங்கை செஞ்சிலுவைச் சங்க முன்னால்),
யாழ்ப்பாணம். (13187)

கொழும்பில்
உள்நாட்டு, வெளிநாட்டு
பயணிகள் தங்குவதற்கு
சிறந்த விடுதி ராஜ்கோ இன.
வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்புகளுக்கு :
Rajko Inn
27, Fareed Place, Colombo-4.
Tel : 554065 - 7 (C/25840)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

மணிசாமி P.T.R.
யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (12029)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும்

பிரவாகம்

புதிய பிரிவிற்கான
இலவசக் கணனிப் பயிற்சி நெறிகள்
ஆரம்பம்

Certificate Courses
- Microsoft Word
- Microsoft Excel
- Microsoft Access
- Microsoft Visual Basic
- Corel Draw
- Adobe Page maker
- Kids Course

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது தேசத்தில்
சகலருக்கும் கணனிக்கல்வி கிடைக்க வழி சமைக்க முயற்சிக்கின்றோம்.

Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:
- ★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
- ★ கணனிப் பயிற்சி நிலையம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், (MC Leod Hospital) கே.கே.எஸ். வீதி, இணுவில்.
- ★ இன்னாசித்தம்பி பாரியார் வளவு, கதிரமலை கோவிலடி, சில்லாலை. (c/26077)

பதிவுக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்
விண்ணப்ப முடிவு திகதி
25-01-2003
விண்ணப்பப்படிவத்தினை
பூர்த்தி செய்து
CHAIRMAN
T.R.R.O
106, 4th Cross Street,
Jaffna
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 04 - 07 - 1936



மறைவு 09 - 01 - 2003

### திருமதி செல்லையா செல்லமுத்து

அன்னாரது மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலிகைச் சந்தி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (13375)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
க.புஸ்பராசா (பேரமகன்).


## பிறந்ததினமும், பிரிந்தவரின் நினைவு தினமும்



### Dr.விஸ்வநாதர் சின்னையா

(நிலப்பிரபு, குளுவான் மலேசியா)
மலர்வு: 1896-01-19
உதிர்வு: 1975-12-13

அன்புச் சிறகினில் அரவணைத்து
அறுசுவை ஊட்டி
அறநெறி வழி காட்டிய எங்கள் அருமை ஐயா!
உங்கள் ஆத்மசாந்திக்கப் பிரார்த்திக்கிறோம்.



### திருமதி சின்னையா

மலர்வு: 1910-08-01
உதிர்வு: 1942-01-30

அம்மாவின் அன்பைப் பகிர்ந்து கொள்ளும்
பாரினை விட்டேகிய எமது
அன்புத் தாயே!
உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.
-மகள்.

பாணாவெட்டி, தொல்புரம், சுழிபுரம். (13327)

## நீங்காத நினைவில்

ஒன்பது ஆண்டுகள்



### அமரர் கந்தையா கனகம்மா

01.05.1931 மண்ணில் 17.05.1917
18.12.1993 விண்ணில் 29.01.2002

ஓராண்டு



### அமரர் இளையதம்பி கந்தையா

திதி: 19.01.2003

பத்து மாதம் சுமந்து எடுத்து எம்மைப் பாசத்தால் வளர்த்தெடுத்தும் பாரினில்
பண்பாளர்களாய் வாழ வைத்துவிட்டுப் பக்துவாய் விண்ணகம் சென்றுவிட்டீர்!
உங்கள் பசுமையான நினைவலைகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது.
- குடும்பத்தினர்.

"வசந்தம்",
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (13372)

## 3ஆம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில் முத்தாக 21 - 10 - 1979



தாயக மண்ணில் வித்தாக 21 - 01 - 2000

### 2ஆம் லெப். இளந்திருமாறன்
சுப்பிரமணியம் சுரேஸ்

வண்ணாங்கேணி - பளை
(யாழ்நகர் நோக்கிய படையெடுப்பின்போது
முகமாலையில் வீரச்சாவடைந்தவர்)

*தாய் மண்ணிலே பிறந்து*
*தாயகம் மீட்கச் சென்ற இளம் வீரனே!*
*தலைவனின் சொற்படி தலை நிமிர்ந்து நடந்து*
*முகாவில் மண்ணில் வித்தாகிய வீர மறவனே!*
*உன் தாயகக் கனவுகள் நனவாகும் இவ்வேளையில்*
*உன் மூன்றாண்டு நினைவில் உன் ஆத்மா*
*சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை எமது சொந்த இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் போராளிகள், பணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இளந்திருமாறன்
குடும்பத்தினர்.

வண்ணாங்கேணி,
பளை. (13204)

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்



## சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் முதலாம் பாதம் முடிய)

சீறும் குணத்தைப் பெற்றிருந்தாலும், மக்களைச் சீர்தூக்கி எடைபோடும் ஆற்றல் பெற்றுள்ள சிம்ம ராசி வாசகர்களே.

நீங்கள் அதிகாரத்தை உபயோகித்து காரியம் சாதிப்பதைவிட, அன்பை உபயோகித்தால் அதிகம் சாதிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நிர்வாகத் திறமையால் எண்ணற்ற நெஞ்சங்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள். கொடுத்து உதவும் தன்மை கொண்ட நீங்கள் கோபம் கொள்வதற்கும் தயங்க மாட்டீர்கள். வெளிவட்டாரத்தில் வியக்கும் விதத்தில் செல்வாக்கு பெற்றிருந்தாலும், வீட்டிற்குள் உங்களுக்கு போராட்டம்தான். மனைவியும், மக்கள் செல்வங்களும் உங்களை அனுசரித்துச் செல்வது அரிது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணத்தைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு புகழை குவிக்குமா, பொருளை குவிக்குமா, பகல் இரவாக பாடுபடும் உங்களுக்கு பதவியை வழங்குமா, என்று நீங்கள் சிந்திப்பது இயல்புதான்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்

இதுவரை உங்கள் ராசிக்கு 10இல் சஞ்சரித்து வந்த சனி பகவான் 22.05.2003 அன்று லாபச் சனியாக மாறி வலம்வர தொடங்குகிறார். எப்பொழுதும் பணப் பிரச்சினையில் சிக்கியிருக்கும் உங்களுக்கு இனி இதயம் மகிழும் விதமாக பொருளாதார வளர்ச்சி கூடப் போகிறது.

தான தர்மங்கள் செய்யும் அளவிற்கு தனவரவு கூடப் போகிறது. பதினொன்றில் சனி வந்தால் பணவரவு அதிகரிக்கும். மதிப்போடு மரியாதையை மக்களெல்லாம் தந்திடுவார் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எது எப்படி இருந்தாலும் இந்த ஓராண்டுக்குள் நிதிநிலை உயரும். நிம்மதி கிட்டும். நட்பு வட்டம் விரியும்.

### குருபெயர்ச்சிக் காலம்

23.7.2003 அன்று உங்கள் ராசியிலேயே குரு சஞ்சரிக்கப் போகிறார். அதன் விளைவால் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். குரு பார்வையால் பஞ்சம ஸ்தானம் புனித மடைவதால் பிள்ளைகளால் முன்னேற்றம் உண்டாகும். உள்ளம் மகிழும் வாழ்க்கைக்கு இந்த குரு உத்தரவாதம் வழங்குவார்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் ராகு, கேதுக்களின் பெயர்ச்சியால் எண்ணற்ற மாற்றங்களை காணப்போகிறீர்கள். சொத்துக்களால் லாபம், சொந்த பந்தங்களால் பாராட்டு, முத்திரை பதிக்கும் விதம் முன்னேற்றமும் கொடுக்கும். தனவரவுகூடும். தொழில் வளம் மேலோங்கும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். மற்றவர்களின் பாராட்டு மழையில் நனைவீர்கள். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கி உற்சாகத்தோடு பணியாற்ற முன் வருவீர்கள். எதிர்ப்புகள் விலகும். அரசியல் ஈடுபாட்டில்கூட ஒரு சிலருக்கு ஆர்வம் அதிகரிக்கும். புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். மனை கட்டி குடியேறி மகிழ்ச்சி காண மார்ச் மாதத்திற்கு பிறகு சனி உங்களுக்கு வழி காட்டும்.

### வளம் சேர்க்கும் வக்ர காலங்கள்

கிரகங்கள் வக்ர கதியில் இயங்கும் பொழுது திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு திக்குமுக்காடச் செய்யும். இருப்பினும் குரு வக்ரமும், சனி வக்ரமும் நன்மையை வழங்கும். புதன் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும் பொருள் விரயத்தை ஏற்படுத்தும்.

### ஜனவரி

குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சுப செலவுகள் ஏற்படும். மாதத்தின் முற்பகுதியில் தொழிலில் திடீர் வளர்ச்சி காணப்படும். பெரியவர்களின் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். இடம், பூமி சேர்க்கை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் மகரத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் மருத்துவச் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகலாம். வழக்குகள் சாதகமாகும்.

### பெப்ரவரி

குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். செய்யும் முயற்சியில் தடை ஏற்படலாம். நீங்கள் நினைப்பது ஒன்று. ஆனால், நடப்பது வேறாகவே இருக்கும்.

மாதத்தின் மையப்பகுதியில் மகத்தான பலனை நீங்கள் எதிர்பார்க்கலாம். தொழிலில் இருந்த மந்தநிலை மாறும். வருமானம் திருப்திகரமாக அமையும். நீண்ட நாளாக உங்களை வாட்டி வந்த நோயில் இருந்து விடுபடுவீர்கள். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

### மார்ச்

குடும்ப உறுப்பினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடும், மனக்கசப்பும் மறையும். புதிய தொழில் தொடங்க அஸ்திவாரம் போடுவீர்கள். புது முயற்சி செய்யும்போது குடும்ப உறுப்பினரின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது. வரவைவிட செலவு அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி குறையும். வழக்குகள் வந்து சேரும். யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம்.

### ஏப்ரல்

சென்ற மாதம் தொழிலுக்காக அஸ்தி வாரம் போட்ட நீங்கள் இப்பொழுது அதனை முழுமையாக செய்து முடித்து வெற்றி பெறுவீர்கள். ஆனால், 14ஆந் திகதிக்கு மேல்தான் அந்த முயற்சி கைகூடும். பகையோடு சென்ற உற்றார், உறவினர்கள் இப்போது பாசத்தோடு வந்து பழகுவர். தந்தை வழி உறவில் நெருக்கம் ஏற்படும்.

### மே

தொழிலில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு பணவரவைக் கூட்டிக்கொள்வீர்கள். இல்லத்தில் இனிய சம்பவம் நடைபெற வாய்ப்பு உண்டு. 22ஆந் திகதி சனி மிதுன ராசிக்கு செல்கிறார். லாபம் பெருகும். வழக்குகளில் வெற்றி கிட்டும். எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடிவரும். அரச முயற்சிகள் அனுகூலமாக அமையும்.

### ஜூன்

பாராட்டும், புகழும் கூடும். தொழில், உத்தியோகத்தில் விரும்பிய இடமாற்றம், ஊர் மாற்றம் கிடைக்கப்பெறுவீர்கள். இல்லம் தேடி வருபவரிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. குடும்ப உறுப்பினர்களிடையே வம்பு, வழக்குகளை வளர்த்து விடுவர். பிள்ளைகளுக்கான திருமண வாய்ப்பு கைகூடும்.

### ஜூலை

மறக்கமுடியாத மாதமாகவே அமையும். பொருளாதார விருத்தி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். விருந்தினர் வருகையும், பிரமுகர்களின் சந்திப்பும் கூடும் மாதமிது. வியாபாரம், தொழில் வழக்கம்போல் நடைபெறும். இடம், பூமியால் சந்தித்து வந்த இடர்பாடுகள் விலகும். குரு பெயர்ச்சியாகி உங்கள் ராசியிலேயே குரு சஞ்சரிப்பது மேலும் யோகத்தை வழங்கும். குரு மங்கள யோகத்தால் மாதத்தின் கடைசி வாரம் சொத்து சேர்க்கைகள் ஏற்படலாம்.

### ஓகஸ்ட்

தொட்ட காரியத்தில் தடைகள் அதிகரிக்கும். பயணங்களும் அலைச்சல்களும் அதிகரிக்கும். உங்களின் கோரிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைவேறுமா? என்பது சந்தேகம்தான்.

எதிரிகளின் பலம் ஓங்கி இருக்கும். தெய்வ பலத்தினால் கடைசியில் நீங்கள் எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். இம் மாதத்தில் ஏற்படும் ராகு கேது பெயர்ச்சியால் பதவி உயர்வுகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் உங்களை விட்டு விலகிச் செல்வர். பணம் பல வழி களிலும் வந்து சேரும்.

### செப்ரெம்பர்

நிதி நிலைமை உயரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உங்களின் பிடிவாதக் குணத்தால் குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புது ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் விரும்பத்தகாத இடமாற்றத்தை சந்திக்க நேரிடலாம்.

### ஒக்ரோபர்

எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள். இல்லத்தில் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். உங்களின் தொழிலை படிப்படியாக முன்னேற்றம் அடையச் செய்வீர்கள். மாதத்தின் முற்பகுதியில் எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத்தரும். உங்கள் கையில் பணம் சரளமாக இருந்து கொண்டே இருக்கும். குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும். வீடு, மனை வாங்கும் அமைப்பு உருவாகும்.

### நவம்பர்

வியாபாரத்தில் போட்டி அதிகரித்தாலும் உங்கள் வியாபாரம் சிறப்பாகவே நடைபெறும். விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சூரியனால் எண்ணிய காரியங்கள் எளிதில் வெற்றி அடையும். பிற இனத்தாரின் ஒத்துழைப்புண்டு. நீங்கள் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். 23ஆந் திகதிக்குப் பிறகு உடல் நலனில் சிறு பாதிப்புகள் ஏற்படலாம்.

### டிசெம்பர்

தொழிலில் ஏற்ற இறக்க நிலை ஏற்படும். இடர்பாடுகள் கூடும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்பச் சூழ்நிலை ஊடலும் கூடலுமாகவே இருக்கும். ஆண்டின் நிறைவு மாதமான தனுசு ராசியில் சூரியன் பிரவேசித்த பிறகு குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும்.

பிள்ளைகள் வழியில் முன்னேற்றம் கிட்டும். வெளி வட்டார பழக்க வழக்கத்தால் புதுமையான அனுபவம் ஒன்றைப் பெறுவீர்கள்.

(மிகுதி நாளை)

---

# சமஷ்டிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டமை இனப்பிரச்சினைத் தீர்வை இலகுவாக்கும்

## பெல்ஜியத்திலிருந்து அமைச்சர் சந்திரசேகரன்

சமஷ்டி ஆட்சி நிலவும் நாடுகளின் முன்னுதாரணம் சகலராலும் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளபபட்டுள்ளமை இலங்கையில் இனப்பிரச்சினைக்கான செயற்பாடுகளை இலகுவாக்கும் - என நான் நம்புகிறேன்.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் பெல்ஜியத்திலிருந்து தெரிவித்துள்ளார்.

சமஷ்டி ஆட்சிமுறை பற்றி ஆராய்வதற்கென வெளிநாடு சென்றிருக்கும் இலங்கைத் தூதுக்குழுவில் அமைச்சர் சந்திரசேகரன் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் இதுபற்றி மேலும் கூறுகையில்:

இலங்கையில் நடைபெறுகின்ற சமாதானப் பேச்சுகளிலும் இது சம்பந்தமாக வெளிநாடுகளில் நடைபெறும் பேச்சுகளிலும் மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட வேண்டுமென தான் முன்வைத்த கோரிக்கையைத் தன்னுடன் வெளிநாடு வந்துள்ள சமஷ்டி ஆட்சி முறை ஆராய்வுத் தூதுக்குழுவினர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இத்தூதுக்குழுவினரிடம் மலையகத்தில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைகள் ஏன் சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டும் என்பதனைத் தான் விளக்கினார் என்றும் - இம்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதன் அவசியம் இப்போதே உணரப்படவேண்டும் என்பதனையும் அவர்களுக்கு உணர்த்தியுள்ளார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## மெய்வன்மைப் போட்டிகள்

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தின் 39ஆவது இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வ.முருகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன. (எ-36)

## குடிதண்ணீர் பைப்புகள் இரவுவேளையில் திருட்டு

சண்டிலிப்பாய்,ஜன.19

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் குடிதண்ணீர் குழாய் பைப்புகள் மூன்று இரவுவேளையில் திருட்டுப்போயுள்ளன.

கல்லூரி மாணவர்களின் குடிதண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்ட இந்த மூன்று பைப்புகளும் கடந்த வாரம் திருடர்களால் சேதப்படுத்தப்பட்டு திருடிச் செல்லப்பட்டுள்ளதாகவும் -

இதனால் மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதில் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் -

கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

---

# மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரைப்போட்டி

வலிகாமம் தெற்கு,ஜன.19

இவ்வருடம் நடைபெறவுள்ள அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி, வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

தரம் 6-7, தரம் 8-9, தரம் 10-11, தரம் 12-13 ஆகிய நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் ஒரு பாடசாலையில் இருந்து ஒரு பிரிவுக்கு ஒருவர் மட்டுமே கலந்துகொள்ளமுடியும்.

கட்டுரைப்போட்டிகள் யாவும் பெப்ரவரி மாதம் 27.ஆம் திகதி நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்ட மாணவர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

தெல்லிப்பழை கல்விக் கோட்ட மாணவர்களுக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் -

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் -

சங்கானைக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறும். (எ-152)

---

# சுவாமி விவேகானந்தர் எழுச்சிவார பேச்சு, கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.19

சுவாமி விவேகானந்தரின் எழுச்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் மற்றும் விவரங்கள் வருமாறு:

**கவிதைப்போட்டி**

அஜந்தாஜினி சற்குணரட்ணம் - வேம்படி மகளிர் கல்லூரி, யாழினி விஜய ஈஸ்வரன் - வேம்படி மகளிர் கல்லூரி, கஜவதனி கந்தசாமி - சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

**பேச்சுப் போட்டி - மேற்பிரிவு**

த.தயாபரன் - கற்குளம் வீதி, கொட்டடி. இ.கேதாரசர்மா - யாழ். இந்துக் கல்லூரி, செ.கவிதரன் - கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

**பேச்சுப் போட்டி - கீழ்ப்பிரிவு**

சஸ்மிதா ரட்ணசிங்கம் - வேம்படி மகளிர் கல்லூரி, சிவலோகநாதன் தவசீலன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மேற்படி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற விவேகானந்தர் விழாவில் வைத்து வழங்கப்பட்டன. (எ)

---

# பாதீனிய ஒழிப்புக்கு ரூ.5 லட்சம் ஒதுக்கீடு

## பணிகள் முழுவீச்சில்

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வளர்ந்துவரும் பாதீனியம் களைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் யாழ்.விவசாய திணைக்கள அதிகாரிகள் முழுவீச்சில் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக வலிகாமம் பகுதியில் கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளிலும், வடமராட்சியிலுமே கூடுதலான பாதீனிய களைகள் வளர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதீனிய களைகளை அழிப்பதற்காக கிருமிநாசனிகளைத் தெளிக்கும் நடவடிக்கைகளில் விவசாய திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கான விவசாய சம்மேளனங்களின் ஒத்துழைப்புடன் கிருமிநாசனிகள் தெளிக்கப்பட்டு வருகின்றன.

பாதீனியம் அழிப்புக்காக ஐந்து லட்சம் ரூபா நிதியினை விவசாயத் திணைக்களம் இவ்வருடம் ஒதுக்கியுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-152)

## 'பாண்ட்' வாத்திய கருவிகள் கிடைத்தன

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு 'பானட்' வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் இவற்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# முருகப் பெருமான் தந்தைக்கு உபதேசித்து தகப்பன் சுவாமியான தைப்பூசத் திருநாள்

இன்று தைப்பூச நன்னாள். அரிதினும் அரிதான இந்த மானிடப் பிறவியில் இறை சிந்தனையைத் தூண்டுவதற்கு வாராவாரம், மாதாமாதம் விரத நாள்களை எமக்கு நிரைப்படுத்தித் தந்திருக்கிறார்கள் எம் முன்னோர்கள்.

சிவசக்தி ஐக்கியத்தைக் குறிக்கும் இந்நாளில் மகரராசியில் சிவரூபமான சூரிய பகவானும் அதற்கு நேர் எதிரான 7ஆம் இல்லமான கடக ராசியில் சந்திரனும் கூடிப் பூமிக்கு இருபுறமும் நேர் கோட்டில் தைப்பூசத்துடன் இணைந்த பூரணையுடன் கூடிய நன்னாளாகும். இம் மகரராசியிலேயே எம்பெருமான் ஸ்ரீமத்நாராணப் பெருமான் பள்ளி கொள்ளுகின்ற வியூக நிலையும் தோன்றுகின்றது என்பர் வைஷ்ணவ ஆச்சார்யர்கள்.

அத்தகைய தைப்பூச நன்னாளிலே தான் இறைவன் முதன் முதலில் ஞாலத்தைப் படைத்து அதிலிருந்து பிரமாண்டம் தோன்றியது என்பதை நினைவூட்ட சில ஆலயங்களில் தெப்போற்சவம் நிகழ்த்தப்படுவதுண்டு.

சிவபெருமான் தன் அதியற்புத ஆனந்தத் தாண்டவமாடியதைக் கண்டுகளித்த திருமால் அதை உள்ளூர நினைத்துப் போற்றியதைக் கண்ட ஆதிசேடன் தானும் அத்திருநடனத்தைக் கண்டுகளிக்கவே பதஞ்சலி முனிவராகி தில்லையில் தவமிருந்தார்.

அவருக்கு அருகில் வியாக்கிரபாதர் எனும் புலிக்கால் முனிவரும் சரியைத் தொண்டு செய்ய இருவருக்குமாகவே இறைவன் கருணை கொண்டு தம் திருநடனத்தைத் தில்லையிலே காண வரந்தந்தோம் என்று இறைவன் தாண்டவம் ஆடியருளிய நாளும் இந்நாளேயாகும்.

**மானுடச்செல்வன்**

தாமே சக்திமிக்கவர் என்று பெருமை பேசிய வாயு, வருண, அக்கினி தேவர்கள் முன்தோன்றிய சிறு துரும்பை முறையே அசைக்க, நனைக்க, எரிக்க முயன்றபோது இயலாது நின்றவர் முன் நாரதர் தோன்றி மேலான பரம்பொருட் சக்தியை எடுத்துரைத்துக் கர்வத்தை அடக்கி அவர்களுக்கு இறைவன் அருட்சததி வழங்கிய நன்னாளும் இந்நாளே.

கற்பகாம்பாள் சமேத கபாலீஸ்வரப் பெருமானைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்று "கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்று அப்பரடிகளும் "நேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று திருஞானசம்பந்தரும், "அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டார்த்தல், கண்ணிலாம் பயன்" என்று சேக்கிழாரும் பாடியுள்ளனர்.

சிறப்புமிக்க இந்நாளில் மக்கள் புத்துணர்ச்சியோடு மணவாழ்வில் மகிழ்ச்சியையும் சகல மங்கலங்களையும் பெறுவதோடு, சிவசக்தி ஐக்கியமான முருகப் பெருமானின் மாட்சிமைமிக்க தினமாக அமைவதனால் முருகன் ஆலயங்களில் அபிஷேகம், திருவிழா நிகழ்த்தப்படுவதையும் நாம் காண்கின்றோம்.

நற்காரியங்களுக்கான ஆரம்ப நாளாகவும், பெண் பிள்ளைகளுக்கு மூக்குக் குத்துதல், காது குத்துதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், திருமணப் பெண் பார்த்தல் போன்றவற்றிற்கும் இந்நாளையே தேர்ந்தெடுப்பர்.

சிவபெருமானுக்கு "ஓம்" எனும் பிரணவப் பொருளை உபதேசித்து முருகப்பெருமான் தகப்பன் சுவாமி எனப் பெயர் பெற்ற நாளும் இந்தத் தைப்பூசத் திருநாள்தான் - இந்த தைப்பூசத் திருநாளில் இயன்ற அளவு தான தருமங்கள் செய்து, அடியார்களுக்கு அமுதளித்து விரதமிருந்து தெய்வானுக் கிரகத்துக்குப் பாத்திரராவோமாக. ★


## யாழ்.குடாநாட்டு வர்த்தகர்களே!

நீங்கள் விற்பனை செய்யும் பொருள்கள், அவற்றின் தரம்,
நீங்கள் வழங்கும் சேவை என்பவற்றை
குடாநாட்டு மக்கள் தெரிந்துகொள்வதற்கும்
உங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும்

- ❖ பாவனையாளர்களுக்கு வாய்ப்பளியுங்கள்
- ❖ உங்கள் விளம்பரங்கள் ஊடாக அவர்களுக்கு உதவுங்கள்
- ❖ அவர்களின் தெரிவுக்கு வழிகாட்டுங்கள்
- ❖ அவர்களை உங்கள் வாடிக்கையாளர்களாக்குங்கள்.



யாழ்.மாநகர சபையின் அதிகாரம் பெற்ற "யாழோசை"
விளம்பர சேவையில் விளம்பரம்
செய்து உங்கள் விற்பனையைப் பெருக்குங்கள்.

பொங்கல் தினத்திலிருந்து பொங்கிவரும் யாழோசையில்
உங்கள் வர்த்தக விளம்பரங்களும் இடம்பெற வேண்டுமா?

தொடர்பு கொள்ளுங்கள் :- இல.167, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 071 355480

(13414)



**Good Value Distributors**

பெருமையுடன் யாழ். பெருமக்களுக்கு வழங்கும்
உலக பிரசித்தி பெற்ற முதற்தர கைக்கடிகாரம்

TITAN
The New World Watch



ஒரு டைட்டன் கடிகாரத்தின் பெருமைமிகு
உரிமையாளர் ஆகுவதற்கு
எங்கள் ஸ்தாபனத்தில்
யாழ். குடாநாட்டிற்குரிய
ஏக விநியோகஸ்தர்

மகாநதி ரெக்ஸ்

**Mahanathy Tex,**
16, New Market,
Jaffna.
Tel : 021 222 2552, 077 7725258

விற்பனையுடன் விற்பனைக்கு பிந்திய சேவைகளுக்கு
நாடுங்கள் 'மகாநதி ரெக்ஸ்'

GOOD VALUE
✺ 2 வருட சர்வதேச உத்தரவாதம்
☆ கோல்ட் பிளேட்டிங் வொரண்டி


நேரடி தொடர்புகளுக்கு:
Good Value Distributors (Pvt) Ltd.,
104/11, Grandpass Road, Colombo - 14.
Tel: 074 - 796726, 071 - 296464

(C/26136)


# சமாதானம் என்பது என்ன?

இன்றைய உலகில் எங்கும், எவரும் பேசும் மொழி சமாதானம். ஏனெனில் எங்கும் ஒரே சண்டை சச்சரவுகள், பிரிவினைகள் பிளவுகள் மக்கள் பொதுவாக வெளியிடும் கருத்து இவற்றிற்கு காரணம் சமாதானம். அமைதி நாட்டில் இல்லை என்பதாகும். பெரும்பாலானோர் எம் நாட்டில் அமைதி இல்லை அதுதான் இதற்கு காரணம் என்று கூறுகின்றார்கள்.

இறைவன் எமக்கு தந்த சமாதானம் எங்கே என்ற வினாவை எழுப்ப வேண்டியவர்களாக இருக்கின்றோம்.



ஆம், உண்மை நிலை அதுதான். இறைவன் பரம்பொருள் அனைத்தையும் ஆண்டு நடத்துபவர். எமக்கு அருளிய இந்த சமாதானத்தை நாம் தொலைத்துவிட்டோம். எம்மிடம் இருந்ததை நாம் தொலைத்துவிட்டு சமாதானத்திற்காய் மற்றவர்களிடம் கையேந்துவது தவறு.

ஏனெனில், தொலைத்தவர்கள் நாம். எனவே அதனை தேடிகக் கண்டுபிடிக்கவேண்டியவர்களும் நாமே. இதனை நாம் ஒவ்வொருவரும் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். இது ஒரு தனிப்பட்ட பயணம். முதற்படியாக சமாதானம் என்றால் என்ன என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டும்.

வெறுமனே சண்டை, சச்சரவு அற்ற நிலைதான் சமாதானம், அமைதி என்று எண்ணிவிடக்கூடாது. சமாதானம் என்ற ஒரு நிலைப்பாடு நீதியினை சமத்துவத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படவேண்டும். அவனுக்கு உரியதை அவனுக்கும் அவளுக்கு உரியதை அவளுக்கும கொடுக்கின்ற வேலையில் மாத்திரம் தான் அமைதி அல்லது சமாதானம் என்ற ஒன்று உருவாகும்.

நானும், நீயும் சமன். எம்மிடையே எந்த விதமான வேறுபாடும் இல்லை. எம்மிடையே புரிந்துணர்வு உண்டு நாம் ஒருவரை ஒருவர் ஏற்று அவருடைய ஆளுமை, உணர்வுகளை மதித்து வாழுகின்ற பொழுது எம்மனதளவில் அமைதி சமாதானம் ஒன்று உருவாகும். இப்பொழுதுதான் எம் தனிப்பட்ட மனங்கள் நிறைவு பெறும்.

நாம் தனிப்பட்ட ரீதியில் மன நிறைவு பெறுகின்ற பொழுதுதான் எம்மைச்சூழ இந்தச்சமாதானம் அல்லது அமைதி உருவாகும். இவ்வாறான ஒரு சூழமைவு எங்கெங்கு உருவாகின்றதோ அங்கு சகோதரத்துவம் பேணப்படும்; மனித மாண்புகள் மதிக்கப்படும். எனவேதான், சமாதானம் நீதியின் அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும் என்று கூறுகின்றோம்.

நாம் எமது நடைமுறை வாழ்வை சற்று அலசி ஆராய்ந்து பார்த்தால் தெளிவாகின்ற உண்மை நீதி அல்லது சமத்துவம் பேணப்படுவதில்லை ஆதும் எங்கெங்கு பிரச்சினை அல்லது முரண்பாடுகள் காணப்படுகின்றதோ அதற்கெல்லாம் ஏதோ ஒரு வகையில் சமத்துவம் நீதியின்மையே காரணமாக இருக்கும் எனவே, ஒவ்வொரு சராசரியான மனிதப் பிறவியும் இந்த சமாதானத்தை

**ஞாயிறு நற்பிரசாதம்**

கொண்டுவர அல்லது மீளவும் கண்டடைய உழைக்கவேண்டும்.

இது சின்ன சின்ன வழிமுறைகளில் என்றாலும் கூட முயற்சி செய்யத்தொடங்க வேண்டும். எமக்கு இதனில் பங்கில்லை என்று எம்மை நாம் ஒதுக்கிக்கொள்ளக்கூடாது. இது நாம் வரலாற்றில் செய்கின்ற தவறாக கூட மாறிவிடும் ஏனெனில் இறைவனின் படைப்பில் மனிதன் உயர்ந்தவன். எமது அழைப்பும் கூட அதுவே. எனவே நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவிகளாக மாற வேண்டும். ஏனெனில்.

*"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில்*
*அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்."*

(மத்தேயு 5/9)

ஆ.பே.வின்சன் அ.ம.தி

# குருநகர் செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை



ஆலயத்தின் தோற்றம்

குருநகர்,ஜன.19

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தின் 75ஆவது வருடத் திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெறும்.

இன்று பி.ப. 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும். நாளை பி.ப. 4.30 மணிக்கு திருச்சொரூபபவனி இடம்பெறும்.

இத்திருச்சொரூபப் பவனி செபஸ்தியார் ஆலயத்திலிருந்து புறப்பட்டு செபஸ்தியார் மேற்கு வீதியூடாக குருநகர் பாங்ஷால் வீதியை டைந்து அங்கிருந்து மத்தியூஸ் வீதி, குருநகர் வீதி, சென்.பற்றிக்ஸ் வீதி, குருநகர் கடற்கரை வீதியூடாக மீண்டும் ஆலயத்தைச் சென்றடையும். அதைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.

இவ்வாலயம் 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்டு அன்றுமுதல் ஆராதனைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எ-51)

# குருநகர் வடிகாலிலிருந்து சேறு அகற்றும் பணி ஆரம்பம்

குருநகரில் உள்ள கழிவுநீர் வடிகால்களிலிருந்து சேற்று மண்ணை அள்ளி வெளியில் எடுக்கும் வேலை யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புப் பகுதியினரால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குருநகர் பகுதியில் உள்ள சிறிய வடிகால்களில் சேரும் சேற்றுமணல குருநகரில் உள்ள பெரிய வடிகால்களில் சென்று சேருகின்றன. குருநகர் ஜஸ்பினான்ற் வீதி, சென்.ஜேம்ஸ் வீதி, தண்ணீர்த்தாங்கி வீதி, புதிய பூங்காவீதி ஆகிய இடங்களில் இப்பெரிய வடிகால்கள் அமைந்துள்ளன.

கடந்த வருடம் மாரிகாலத்துக்கு முன்னரே இவ்வடிகால்களில் இருந்து சேற்று மணல் அள்ளி வெளியில் எடுக்கப்பட்டது. மாரிகாலம் முடிவடைந் ததைத்தொடர்ந்து தற்போது சேற்று மணலை வெளியில் எடுத்து துப்புரவு செய்யும் வேலையை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் யாழ்மாநகர சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்கரையோரங்களில் உள்ள வடிகால்கள் இராணுவத்தினால் தடுக்கப்பட்டுள்ளதனால் சுத்திகரிப்பு வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளமுடிவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது (எ-51)

## கொக்குவில் மத்திய சனசமூக நிலைய
## முன்பள்ளித் திறப்பு விழா

காலம் : இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி
இடம் : கொக்குவில் மத்திய சனசமூக நிலைய புதிய கட்டடம்
*(கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்)*

பெற்றோர்களே!

வளமான எதிர்கால வாழ்விற்குப் பலமான அத்திவாரம் முன்பள்ளி கற்றல் செயற்பாடே. அதனைச் சிறந்த முறையில் பெற அன்றையதினம் தங்கள் மழலைகளை எங்களுடன் இணைத்துக்கொள்ளுங்கள்.

**அனுமதி: இலவசம்**

குறிப்பு: சிறுகட்டணத்துடன் ஆங்கிலம், கணனி அடிப்படை அறிவு வழங்கப்படும்.

*உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

செயலாளர்,
கொக்குவில் மத்திய சனசமூக நிலையம். (C/26131)



## மீண்டும் அதே இடத்தில்
## சரவணபவன் ஆபரண மாளிகை

இடம்பெயர்வு காரணமாக இதுவரை காலமும் தற்காலிகமாக சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் —

18.01.2003 சனிக்கிழமை முதல் முன்னர் நிரந்தரமாக இயங்கிய சாவகச்சேரி, கண்டி வீதியிலுள்ள அதன் சொந்த இடத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- உரிமையாளரும் ஊழியர்களும்.

(13399)



# OFFICE EQUIPMENT
### TECHNICAL CENTRE

அலுவலக உபகரணங்களுக்கான தொழில்நுட்ப நிலையம்

வாடிக்கையாளர்களே!

மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுக்கொண்ட "140, நாவலர் வீதியில் இயங்கிவந்த O.E.T.C" தற்போது 330, கே.கே.எஸ். வீதி, யாழ்நகரில் இயங்கிவருகிறது என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். அலுவலக உபகரணங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்தம் செய்துபெற்றுக்கொள்ளலாம்.

எமது சேவைகளாவன!
- ✦ தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள், அவற்றுக்கான உதிரிப்பாகங்களை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
- ✦ தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள், உருக்குத் தளபாடங்கள் திருத்தம் செய்தல்.
- ✦ புதிய, பழைய தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள் என்பனவற்றைக் கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும்.
- ✦ கணனி, றோணியோ, போட்டோக் கொப்பிப் பிரதிகள்.
- ✦ ஸ்கிறீன் பிறின்ரிங்.

(13258)

தொடர்புகொள்க:
O.E.T.C
330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 0777 102492

250, கண்டி வீதி, வவுனியா.

78, அஞ்சல் நிலைய வீதி, திருகோணமலை.
தொ.பே.இல.: 026 - 23176


## திறப்புவிழா

கந்தரோடை சனசமூக நிலையம், ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை ஆகியவற்றின்கீழ் இயங்கும் சிறுவர் முன்பள்ளிக்கான புதிய மண்டபம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வலி. தெற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மண்டபத்தைத் திறந்துவைப்பார்.

வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் இராசா தணிகாசலம் சிறப்பு விருந்தினராகவும் வலி.தெற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-152)

## இந்துப் பேரவை கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜன.19

வடபிரதேச இந்துப் பேரவையின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று முற்பகல் 11.30மணிக்கு யாழ்.வீதியில் (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) பேரவைத் தலைவர் சு.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் துவைத்திலிங்கமும் கலந்துகொள்வர். (எ-10)

## வதிவிடப்பயிற்சி வகுப்பு

அச்சுவேலி,ஜன.19

'நியாப்' வேலைத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்று ஐந்து தினங்கள் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் 25ஆம் திகதி சனிக்கிழமைவரை நடைபெறும் இந்த வதிவிடப்பயிற்சியில் விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

## இலக்கிய ஒன்றுகூடல்

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் இலக்கிய ஒன்றுகூடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் எழுத்தாளர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரபல எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'லண்டன்ரைம்ஸ்' ஆசிரியர் பிரராஜசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-10)


## மிரூ தொலைத்தொடர்பு நிலையம்

இராசாவின் தோட்ட வீதிச் சந்தி,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

- ★ உள்வரும் அழைப்புக்கள் 1நிமிடம் 2/- மட்டும்
- ★ வெளிச் செல்லும் அழைப்புக்கு 1நிமிடம் 7/- மட்டும்.
- ★ விமான ரிக்கெற்றுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ வேலை பழக பெண் பிள்ளைகள் தேவை.

(13408)



## A9 ROAD CONSTRUCTION
### QUOTATIONS INVITED FOR SUPPLY OF MATERIALS AT SITE BETWEEN PALAN AND IYAKKACHCHI

| | | |
|---|---|---|
| 1. CRUSHER METAL | - 12.5mm | - 1500 cu.m. |
| 2. CRUSHER METAL | - 20mm | - 50 cu.m. |
| 3. CRUSHER METAL | - 40mm | - 300 cu.m. |
| 4. RUBBLE 150 | - 225 mm | - 600 cu.m |
| 5. METAL | - 100mm | - 2200 cu.m. |

49, AMPALAVANAR ROAD,
ATHIADY,
JAFFNA. (13394)

MANOHARAN & VETTIVEL.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 02 - 1940



மறைவு 20 - 12 - 2002

## அமரர் முத்தையா சுந்தரலிங்கம்

20.12.2002 அன்று எமது குடும்ப ஒளிவிளக்கு மறைந்தபோது, ஆதரவு தந்து பல உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றி. அன்னாரது வீட்டுக்கிரியைகள் இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (13410)

மனைவி,
உற்றார், உறவினர்.

சிவமயம்

## முதலாம் மாத நினைவு கூரல்

அன்புடையீர்!

எங்கள் குடும்பத் தலைவர்

## வல்லிபுரம் யோகரட்ணம்



அவர்கள் அமரத்துவம் அடைந்து ஒரு மாதம் நிறைவுபெறும் நாளான நாளை (20.01.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு கூரல் நிகழ்ச்சியில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கும்:

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (13404)

திருமதி நீ.யோகரட்ணம்,
மக்கள், மருமக்கள், குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாள் நினைவலைகளும்

தோற்றம் 19 - 01 - 1948



மறைவு 01 - 02 - 1999

## வியாகேசு யோகராஜா

*(ஆசிரியர், யா/கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், வாணம்பாடி வில்லிசைக்குழு நாயகன், வானம்பாடி யோகராஜ்)*

திதி: 19.01.2003 (பிரதமை)

பாசங்களை மறந்து - நேசித்த தேசத்தைத் துறந்து - இசை பாடியே பறந்திட்ட பாசமலரே - உங்கள் நேசமுகம் காணத் துடிக்கிறோம் அப்பா! நான்கும் ஆண்டென்ன நாலாயிரம் ஆண்டுவரையும் வாசலில் விழிவைத்துக் காத்திருப்போம். உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: இராஜேஸ்வரி (ஆசிரியை),
பிள்ளைகள்: யோ.நிவேஷ்குமார்,
யோ.ஹம்ஷானந்தி.

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (13406)


## புதுக் கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணிமுதல் 11.05மணிவரையுள்ள சுபவேளையில்

# தேவ்குரு

எமது புதுக்கடைத் திறப்பு விழா நடைபெறும். அவ்வமயம் எமது அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

6, ஸ்ரான்லி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
தேவகுரு குடும்பத்தினர்.

415, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Mobile 0777 183474
E.mail: vimal thevaguru @ yahooco.lk

**Computer typing, offset Printing, screen Printing, Telephone, Fax, Internet & E.mail & Mobile Accessories.**

(13405)

## ST.PATRICK'S COLLEGE JAFFNA

**க.பொ.த. உயர்தரம் 2005 Batch**

க.பொ.த. (உயர்தரம்) கலை, வர்த்தகம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் (கணிதம்) ஆகிய வகுப்புக் களுக்கு புதிதாக அனுமதிபெற விரும்புவோர் 30.01.2003 இற்கு முன் விண்ணப்பித்து அனுமதிபெறலாம்.

(C/26137) அதிபர்.


## சமய சந்நிதிகளில்

மாதனையில் புதிதாக அமைக்கப படவுள்ள கற்பகப் பிள்ளையார் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அடிக்கல்லை நட்டு வைபபார். (எ-10)

* * *

காரைநகர்,ஜன.19

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.06மணி தொடக்கம் 11.36 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (எ-73)

## பண்டிதர் வகுப்புகள்

கீழைத்தேச கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் பிரவேச பண்டிதர், பால பண்டிதர் மற்றும் பண்டிதர் வகுப்புகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இல.223, காஙகேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி பணிமனையில் தொடர்புகொண்டு வகுப்புகளில் பங்குகொள்ளலாம் என்வும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

## குருநகரில் இன்று கற்கைநெறி ஆரம்பம்

அடிப்படைக்கல்வியில் தகுதி பெறாத நிலையிலுள்ள குருநகர் மாணவர்களுக்காக குருநகர் அறிவகம் அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் அடிப்படைக் கற்கைநெறியின் 2ஆம் வருடத்திற்கான வகுப்புக்கள் இன்று பி.ப. 2.30 மணியளவில் யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கடந்த வருடம் மே மாதம் ஆரம்பமான இக்கற்கைநெறியில் சுமார் 90 மாணவர்களுக்கு அடிப்படைக் கல்விப் போதனை இடம்பெற்றது. இவ்வாண்டும் இக்கற்கை நெறியை பின்பற்றுவதற்கு 90 மாணவர்கள் குருநகரில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும்-

இவர்களுக்கு இறையியல், சுகாதாரம், ஒழுக்கம் ஆகியவைகள் போதிக்கப்படவுள்ளன என்றும்-

மன்ற இயக்குநர் சே.சுவைனஸ் தெரிவித்தார்.

பாடசாலைகளில் போட்டிக்கல்வி நடைபெறும் இக்காலகட்டத்தில் அடிப்படைக்கல்வியில் தகுதி பெறாமல கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு அடிப்படைக கல்வியைப் புகட்டி கல்வியில் ஆர்வத்தை ஊட்டவேண்டியது அவசியம் என்றும்- அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

## திருமறைக் கலாமன்றத்தில் புதிய பிரிவுகள் விரைவில்!

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினால் இலவசமாக நடத்தப்பட்டுவரும் நாடகப் பயிலகம், சிறுவர் கலைக் கூடம் என்பவற்றில் இந்த வருடத்துக்கான புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு அரங்கு தொடர்பான பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நாடகப் பயிலகமும் -

சிறுவர்களின் உடல், உளவளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் சிறுவர் கலைக்கூடமும் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் வாய்ப்பாட்டு, பரதம், ஓர்கன், கிற்றார், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கதகளி, வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின்கலைகள் பயிற்சிகளின் புதிய பிரிவுகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் -

இந்த பயிற்சிநெறிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மன்றத்தின் ஊடகத் தொடர்பாளர் செல்மர் எமில் கேட்டுள்ளார். (எ-4)


## எதிர்பாருங்கள்!

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் கடந்த 29.12.2002 இல் நடத்தப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்ட "ஙங்கார மழை" இசை நிகழ்ச்சி மீண்டும் புதுப் பொலிவுடன் எதிர்வரும் 02.02.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று மேடையேறுகிறது.

ஏற்கனவே விற்கப்பட்ட பிரவேசச் சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்.
யாழ்.பல்கலைக்கழகம். (13398)



## மாதாந்தக் கருத்தரங்கு

பொருள் : நாட்டுக்கூத்து பிரதியாக்கமும் மதிப்பீடும்.

கருத்துரை வழங்குபவர : கலாபூஷணம் பாஷையூர் தேவதாசன்.

நாள் : இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை.

நேரம் : மாலை 4.30 மணி.

இடம் : மன்ற கலைத்தூது மணிமண்டபம்.

*ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக் கலாமன்றம். (C/26134)



## தைப்பூசம்



சரவணை தொட்டாங்காடு ஞானவைரவர் ஆலயம்

இன்று (19.01.2003) ஞாயிறு காலை 10.00மணிக்கு தைப்பூச விசேட பூசை நடைபெறும்.

அறங்காவலர்
இ.நகுலேசபிள்ளை (13412)



## ஆள்கள் தேவை

கட்டடப் பொருள்கள் விற்பனையில் அனுபவம் வாய்ந்த சிட்டை எழுதுநர்/விற்பனையாளர் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பிரபல கட்டடப் பொருள் விற்பனையாளர்கள்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
*(இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக)* (13416)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சு.இராமலிங்கம் (J.P.)
*(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)*

அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட திரு. சு. இராமலிங்கம் அவர்களின் சமூகசேவை சிறப்படைய பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*மக்கள் சேவையே மகேசன்சேவையாய்*
*நித்தம் ஆற்றும் பெருந்தகை வாழி!*
*பத்தியின் பேறாய்ப் பட்டமும் பெற்றீர்*
*பித்தன் அருளால் பீடு பெற்றுய்வீர்.*

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (13411) -அன்பர்கள்,



## ஆனந்தஜோதி வைத்தியசாலை இடம்மாற்றம்

இதுவரை உரும்பிராயில் இயங்கிவந்த வைத்தியசாலை மீண்டும் சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியில் இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை முதல் இயங்குகின்றது.

☞ ஞாயிறு முழுநாளும், வெள்ளி மாலையும் வைத்தியசேவை நடைபெறமாட்டாது.

(13407) வைத்தியகலாநிதி
வ.சின்னப்பு.



## மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றம்

### அறிவித்தல்

இன்று (19.01.2003) நடைபெறவிருந்த மன்றப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் 23.02.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு நடைபெறவுள்ளதால் அனைத்து வணிகர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும், பிரேரணைகள் இருப்பின் கூட்டத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

க.வேதநாயகம் *தலைவர்.* (C/26141) சி.குணரத்தினம் *செயலாளர்.*



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லலும் அந்தியேட்டி அழைப்பும்

நிலமிசை வரவு 29 05 1924



பொன்மிசை சேர்வு 21 12 2002

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

### திருமதி நடராஜா குணலட்சுமி

**திதி : 20.01.2003**

எங்கள் அன்புத் தாயார் திருமதி ந.குணலட்சுமி அவர்கள் 21.12.2002 அன்று சிவபதமடைந்த வேளையில் உடனிருந்து தேற்றியும், ஆறுதல் செய்தி அனுப்பியும் எங்கள் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (20.01.2003) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் நண்பகல் எமது இல்லத்தில் இடம்பெறும் சபண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னையின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ந.அனந்தராஜ் (உ.த.கல்விப்பணிப்பாளர், மாகாணத் திணைக்களம்.)
ந.குணராஜ்
ந.இராஜேஸ்வரன் (இரத்தின மாளிகை, வல்வை)

*தெணியம்மை,*
*வல்வெட்டித்துறை.* (13415)



## முதலாம் ஆண்டு முகிழ்க்கும் நினைவுகள்

தோற்றம் 15 - 08 - 1944



மறைவு 29 - 01 - 2002

### அமரர் செல்லப்பா செந்தில்நாதன்

*(மின்பொறியியலாளர் இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்)*

முந்நாளும் பொன்னாலை வரத ராசன்
முகமலர்ந்து எமக்களித்த முத்தார் தலைவா
எந்தமது வாழ்வுறவில் ஏற்றங் காண
எந்நாளும் உழைத்துநின்ற எம்அப் பாவே!
சொந்தமதை விட்டகன்றோ ராண்டு சென்றாலும்
சோகமதாற் துடிக்கின்றோம் என்றும் நீங்கள்
வெந்தபொடி நீறணிந்து விடையி லேறும்
விமலவன் தாளின்கீழ் பெறுக சாந்தி!!

*59, இராமநாதன் வீதி,*
*நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.* (13420) -குடும்பத்தினர்.



## படிவம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்ற மாணவ குடும்பநல உத்தியோகத்தர் (மருத்துவ மாதர்) களைப் பயிற்றுவிப்பதற் கான ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவம் கிடைக்கும். விவரங்கள் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:-
05-02-2003
பாரதி பதிப்பகம்,
430, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம் (C/26135)



## கண்ணீர் அஞ்சலி

சங்கத்தானை இத்தியடி வீரசக்தி விநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களின் பாசமிகு தந்தை

**பஞ்சநாதீஸ்வரக் குருக்கள் இரகுநாதசர்மா**

அவர்கள் இயற்கைநியதியதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (13423) நிர்வாகசபை உறுப்பினர், பொதுமக்கள்.

கணபதி துணை

## இந்துசமய விவகார அமைச்சினால் ஆரம்பிக்கப்படும் குருகுலத் திறப்பு விழா

மேற்படி குருகுலம், இந்துசமய விவகார அமைச்சர் மாண்புமிகு **திரு.தி.மகேஸ்வரன்** அவர்களால் மங்களகரமாக திறந்து வைக்கப்படும்.

இடம் - யாழ்/பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
காலம் - சித்ரபானு வருஷம் தைத்திங்கள் 6ஆம் நாள் (20.01.2003)
நேரம் - மு.ப.10.00 மணிக்கு (நியமன நேரம்)

நிகழ்ச்சி நிரல்

காலை 8.00மணிக்கு நல்லூர் சிவன் கோவிலிலிருந்து குருகுலத்துக்கு மதத்தலைவர்களை மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வருதல். திறப்பு விழாவைத் தொடர்ந்து ஆசியுரைகள்/ அருள் உரைகள்/ வாழ்த்துரைகள்/ சிறப்புரைகள் இடம்பெறும். சகல அந்தணப் பெருமக்கள், மதகுருமார்கள், சைவப்பெருமக்கள், ஆலய பரிபாலகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.
(13429)


# மரண அறிவித்தல்கள்

## யோசேப்பு வின்சன்ற்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட யோசேப்பு வின்சன்ற் நேற்று (18.01.2003) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு தம்பதிகளின் அன்பு மகனும் செபமாலை தம்பதிகளின் அன்பு மருமகனும் மற்றும் மோட்சலங்காரத்தின் அன்புக் கணவரும் மரியதாஸ் (மாஸ்ரர்), இராசமலர், ஜெயமலர் அலோசியஸ் (ஆசிரியை, மத்திய மகா வித்தியாலயம், வசாவிளான்), அன்ரன் மரியதாஸ், அல்பிரட் மரியதாஸ் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையாரும், எலிசபெத் ஞானேஸ்வரி, அன்ராசா (C.T.B. யாழ்.டிப்போ) அலோசியஸ் (சோபனா புடைவையகம், யாழ்ப்பாணம்), மல்லிகா லூர்துநாயகி, மேரிசெலின் ஆகியோரின் அன்பு மாமனாரும், சில்வெஸ்ரரின் மைத்துனரும், யஸ்தஸ் (உயர் தொழில் நுட்பக் கல்லூரி), யூலியானா, உடுவில் மகளிர்கல்லூரி மாணவிகளான ஜஸ்ரீனா, தோமஸ், கிறைன்ஸ் மற்றும் ஆதர், ஹென்றி, எட்வேட் (யூனியன் கல்லூரி), ஏஞ்சல் கிறிஸ்டி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பொனிப்பாஸ், வேதநாயகம், யேசுதாசன் மற்றும் திருஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.01.2003) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடக்கும் இரங்கல் திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
(13435)
தகவல்:
வி.மரியதாஸ் (மகன்)
(மாஸ்ரர்)

## திருமதி நல்லப்பா சின்னம்மா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லப்பா சின்னம்மா நேற்று (18.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லப்பாவின் அன்பு மனைவியும் அருமை முத்துவின் பாசமிகு தாயாரும் பாலசுப்பிரமணியத்தின் (லஷ்மி புத்தக நிலையம், யாழ்.) பெரிய தாயாரும், காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் புவனேஸ்வரியின் மாமியாரும் நந்தபாலன் - குகராணி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கிருஸ்ணானந்தன் மற்றும் இராஜேஸ்வரி, கமலகாந்தன் - பெரி (இந்தியா), மங்கையர்க்கரசி - சிவானந்தன்(பிரான்ஸ்), பவானி - அரவிந்தன் (நோர்வே), பிரதீபன் (ஜேர்மனி), பிரவீனா, பிரசாந் ஆகியோரின் பேர்த்தியும் நிலன், நிமலன், கல்பனா, யுவன், நவன், ப்ருசோத், அபிரா, ஆரவி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(13434)
தகவல்:
பொ.பாலசுப்பிரமணியம்
(பெறாமகன்)



தென்மராட்சிக்கு ஒரு தென்றலென புதுமணம் வீசி
மீண்டும் வருகின்றாள் வாணி

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

*அன்புடையீர்!*
இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்னாளில்
காலை 10.06 மணிமுதல் 11.36 மணிவரையிலான
சுபமுகூர்த்தத்தில் எமது



## வாணி ரெக்ஸ்



புடைவை வியாபார ஸ்தாபனத்தை மீண்டும் புதுப்பொலிவுடன்
இல.11, நவீனசந்தை, சாவகச்சேரியில் ஆரம்பிக்கின்றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த மங்களகரமான திறப்புவிழா நிகழ்வுக்கு எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வணிகப்பெருமக்கள் அனைவரையும் வருகைதந்து நல்லாசிகளை வழங்கி விழாவைச் சிறப்பித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"வாணி ரெக்ஸ்",
11,நவீனசந்தை,
சாவகச்சேரி.
☎ 070 213117
- உரிமையாளர்.
(C/26139)


## புத்தர் சிலை சேதமாக்கப்பட்டது

இருபாலைச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை இனந்தெரியாதோரால் உடைத்து அழிக்கப பட்டுள்ளது.

இருபாலைச் சந்தியில் உள்ள அரசமரம் ஒன்றின் கீழ் படையினரால சில காலத்திற்கு முன்பு அமைக்கப் பட்டிருந்த புத்தர் சிலையே கடந்த வியாழக்கிழமை இரவு அங்கிருந்து இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டு உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (ஐ-ரி-180)

## கண்ணீர் அஞ்சலி விளம்பரம்

கடந்த 13ஆம் திகதி 'உதயனில்' 4 ஆம் பக்கத்தில் வெளியான **திருமதி மகாதேவா பாலாம்பிகை** என்பவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் -

அந்த விளம்பரத்தைப் பிரசுரித்த விளம்பரதாரர்களின் பெயர்களுடன் உதவிஆணையாளர் க.சுந்தரேசன், கமநல அபிவிருத்தி, காப்புறுதி திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் சேர்த்து வாசிக்கவும்.


எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ காலாட்படை
(பிரதிகள் உடன் பெறலாம்)
★ ராமச்சந்திரா
★ ஆதித்தியன் IPS
(பிரதிகள் பிற்பகலில் பெறலாம்)
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
(C/26146)

லஷ்சுமி இணுவில்
மாதவன், ரீமாஜென்சின், நவான், விவேக்



ரன் (றீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)
(13418)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா, வடிவேல், மணிவண்ணன்



வசீகரா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்.
பிரசாந், ஸ்நேகா, நாசர் நடித்த



விரும்புகிறேன் (றீலஸ்)
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நேரம்).
(13417)

நிறைஞ்சனாஸ் சங்கானை



ஜெயசூர்யா, காவ்யா நடித்த
என்மன வானில்
கா.நே. - 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
ஸ்பைடர் மான்
8.45 சனி, ஞாயிறு
(C/26063)



## தேவை

**பேக்கரியில் தங்கியிருந்து வாகனம் செலுத்தக்கூடிய அனுபவம் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட சாரதியும் *(அருகிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது)* பேக்கரி தொழில் அனுபவமுள்ளவர்களும், விற்பனையாளர்களும் தேவை. உடன் நேரில் வரவும்.**

**118, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(13422)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் குணபாலசிங்கம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் குணபாலசிங்கம் அவர்கள் நேற்று (18.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம - சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகனும், சுரேஸ்குமார், சதீஸ்குமார் சிவகுமார், விஜயகுமார், நாகதர்சினி (யா/இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சபாரத்தினம், தர்மரத்தினம் மற்றும் கனகலிங்கம், பரமலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லம்மா, புவனேஸ்வரி, கண்ணையா, நல்லையா காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2003) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/7 மானிப்பாய் வீதி,*
*(செழியன் ஒழுங்கை)*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*
(13433)
தகவல்:
கு.நாகம்மா
(மனைவி)

## தம்பு சிவபாக்கியன்

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் 198, சென்.பெனடிக்ற் றோட் (ஆசீர்வாதப்பர்), அரியாலையைப் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவபாக்கியன் நேற்று (18.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ராணி, ஜெகசோதி (முன்னாள் ஆசிரியை, திருமலை, புனித சூசையப்பர் கல்லூரி) மற்றும் சிவநாதன் (யாழ்.மாநகரசபை, சுகாதார பரிசோதகர்), மீரா அருள்நேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்), சிவமோகன் (கிராமசேவை உத்தியோகத்தர், நல்லூர்), சியாமாஜஸ்ரஸ் (ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி), சிவயோகன் (தாதி உத்தியோகத்தர் & நாற்சதுர சுவிசேஷசபை போதகர்), சிவரூபன் (பொறியியலாளர், லண்டன்), சிவவாசன் (பிரான்ஸ்), சிவகாந்தன் (லண்டன்), ரஜனி மோகனகுமார் ('ரான்' அலுவலகம், கச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜெகசோதி (சட்டத்தரணி, திருமலை), அன்ரனி றோஸ், அருள்நேசன் (முன்னாள் வங்கி உத்தியோகத்தர் & றேடியன்ற் கல்வி நிறுவன நிர்வாகி), அன்யுலிட், சசிகலா (லண்டன்), திருநிறைச் செல்வி (பிரான்ஸ்), ஜன்ஸிராணி (லண்டன்), மோகனகுமார் (கட்டட மேற்பார்வையாளர்), சன்ரியாகோ (சுகாதார மேற்பார்வையாளர், யாழ்.மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதன் (Doctor, கொழும்பு, களுபோவில வைத்தியசாலை), பிரதீஸ் (3ஆம் வருட மருத்துவ பீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), அமிர்தாப் (A/L ஸ்ரான்லி கல்லூரி மாணவன்), சிந்தனா (திருமலை, கன்னியர்மட மாணவி), ஆருணியா (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), டெஸ்மன் ரஜீவன் (O/L ஸ்ரான்லி கல்லூரி), நந்திகா - நிருத்திகா (சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவிகள்), நிதுஷன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), யெகுடிலக்ஷன் (ஆரம்பப் பாடசாலை), பிவ்ஷான், தாருண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2003) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*198, சென்.பெனடிக்ற் வீதி*
*(ஆசீர்வாதப்பர் வீதி),*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*
(13431)
தகவல்:
R.அருள்நேசன் (மருமகன்)
(நிர்வாகி, றேடியன்ற் கல்வி நிறுவனம், அரியாலை)

## அருட்செல்வி
## மேரி மொணிக்கா பேக்மன்ஸ் (தி.கு.)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பேக்மன்ஸ் - பிரகாசி அம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் யாழ்.திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட்செல்வி மேரி மொணிக்கா பேக்மன்ஸ் அவர்கள் நேற்று (18.01.2003) சனிக்கிழமை இளவாலைத் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தின் சிற்றாலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின் இளவாலைச் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*திருக்குடும்பக் கன்னியர்*
*இல்லம்,*
*இளவாலை.*
(13427)
தகவல்:
அருட்செல்வி ஸ்ரெலா துரைசாமி
திருக்குடும்ப மாகாண ஆலோசகர்.

## செகராஜரட்ணம் ஜெகநாதன்

*(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், தொண்டமனாறு - கனடா மொன்றியல் முருகன் கோவில் மனேஜர்)*

தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட செகராஜரட்ணம் ஜெகநாதன் 17-01-2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செகராஜரட்ணம் - அன்னப்பொன்னு தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற புனிதமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிர்மலநாதன் (மேஜர் மேகன்), நளினி (கனடா), குகநாதன் (கனடா), கேதாரணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரணிதரன (கனடா), லோகநாதன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், சுஜித்திரா, தீபிகா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை மொன்றியலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மொன்றியல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.*
(13421)
தகவல்:
திலகராஜா இராஜசிங்கம் (பவுண்)
(மைத்துனர்)

# கிருமிநாசினி விசிறுவதற்கான தெளிகருவிகள் கிடைத்தன

அச்சுவேலி,ஜன.19 : பழமரங்களுக்கு கிருமிநாசினி விசிறும் தெளிகருவிகள் குடாநாட்டில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பழமரச் செய்கையாளர்கள் கமநல சேவை நிலையங்களுடன் தொடர்புகொண்டு பழமரங்களுக்கு உரிய காலத்தில் கிருமிநாசினிகளை தெளித்து பழச்செய்கையை விருத்தி செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாமரங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சிகளினால் மாம்பழ உற்பத்தி பெருமளவில் பாதிப்படைந்து வருகின்றது.

மாமரங்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் கிருமிநாசினி தெளிப்பது மாம்பழங்களின் தரத்தையும், உற்பத்தி அளவையும் அதிகரிக்கச் செய்யுமென விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## பயிற்சிநெறி ஆரம்ப வைபவம்

காரைநகர்,ஜன.19

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் 2003 ஆம் ஆண்டுக்கான தையல், மனையியல் பயிற்சிநெறி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

காரைநகர், களபூமி கைத்தொழில் நெசவு மண்டபத்தில் நடைபெறவுள்ள பயிற்சிநெறியினை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆரம்பித்துவைப்பார். (எ-73)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்ப்பாணம் யோகக் கேந்திரா நிறுவனம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்திலும் யோகாசன வகுப்புகளை இன்றுமுதல் தினமும் காலை 6.15 மணிமுதல் 7.30 மணிவரை நடத்தவுள்ளது.

இந்த யோகாசன வகுப்புகள் மேற்படி நிறுவனத்தினரால் நல்லூரில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்திலும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

மருதங்கேணி பாடசாலையில்

# போராளி ஞாபகார்த்தமாக நூலகத்துக்குக் கட்டடம்

வடமராட்சிகிழக்கு,ஜன.19

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் லெப்.கேணல் கலாத்தன் நினைவாக நூலகம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

லெப். கேணல் கலாத்தனின் குடும்பத்தவரால் ஆறுலட்சம் ரூபா செலவில் இந்த நூலகக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வியாழக்கிழமை லெப்.கேணல் கலாத்தனின் பிறந்த தினத்தன்று பாடசாலை அதிபர் ம.நவநீதமணி தலைமையில் நடைபெற்றது.

கலாத்தனின் தாயார் நூலகத்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இவ்வைபவத்தில் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-182)

# கிராமத்தில் வந்துவிழும் துப்பாக்கிச் சன்னங்கள்

காரைநகர்,ஜன.19

காரைநகர் கடற்படை முகாம் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தால் துப்பாக்கிச் சன்னங்கள் ஊர்காவற்றுறை, பருத்தியடைப்புக் கிராமத்தில் வந்து விழுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிமுதல் 10 மணிவரை நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பெருமளவு சன்னங்கள் இக்கிராமத்தில் வந்து விழுந்ததாகவும்-

இதனால் இக்கிராம மக்கள் அச்சமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று கடந்த சனிக்கிழமையும் இந்த கிராமத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அண்மைக்காலமாக இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இந்நிலையில் அடிக்கடி கிராமத்தில் வந்து விழும் துப்பாக்கி சன்னங்களால் அவர்கள் பீதியடைந்துள்ளனர்.

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யமாடா ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஜப்பான் அரசின் விசேட தூதர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து இங்கு சுமுகமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. வடபகுதி மக்களும் தென்பகுதி மக்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்து சகோதரத்துவ மனப்பான்மையுடன் வாழ வேண்டும். அதனைத்தான் இந்த அரசு நிறுவ முயற்சிக்கிறது.

சர்வதேச நிறுவனங்கள் குறிப்பாக உலக வங்கி, யுனெஸ்கோ போன்ற நிறுவனங்களும் அரசின் இந்த சமாதான முயற்சிக்கு தமது ஆதரவுக் கரங்களை நீட்டியுள்ளன.

ஜப்பான் பிரதமர் கடந்த வருடம் சிட்னி நகரில் உரையாற்றும் பொழுது இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக தெரிவித்திருந்தார் - என்றார் அகாஷி.

கேள்வி: விடுதலைப் புலிகள் ஜனநாயக மரபுகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை தங்களுக்கு உண்டா?

பதில்: என்னைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் ஜனநாயக மரபுகளை கடைப்பிடிக்க திட சங்கற்பம் பூண்டுள்ளனர். அவர்களது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இருக்காது. எனவே நான் நம்புகிறேன்.

கேள்வி: சமாதானப் பேச்சுக்களைப் பொறுத்தவரை தங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும். இரு தரப்பினரதும் இறுதிக்கட்ட முடிவுகளில் ஜப்பான் தலையிடாது. மத்தியஸ்தம் வகிக்கும் நோக்கம் ஜப்பானுக்குக் கிடையாது. அதனைத்தான் நோர்வே அரசு செய்து கொண்டிருக்கிறது. நாம் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் உதவிகளை வழங்குவோம். சமாதானத்துக்கான விசேட பிரதிநிதி என்ற வகையில் நான் ஒவ்வொரு மாதமும் இங்கு வந்து செல்வேன்.

- இவ்வாறு அகாஷி மேலும் பதிலளித்தார். (ம-12)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அதிகாரிகள் அகாஷியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். இதனை ஏற்றுக்கொண்ட அகாஷி, ஜப்பான் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் பணியுடன் நின்று கொள்ளும் என்றும் -

உலக நாடுகளில் சமாதானத்தை ஊக்குவித்து வருவது போன்றே இலங்கை விடயத்திலும் தாம் செயற்பட்டு வருவதாகவும் - இந்திய அதிகாரிகளிடம் அகாஷி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அகாஷியிடம் கேட்டபோது,

இந்தியா தனது கருத்தை எச்சரிக்கைப் பாணியில் தெரிவிக்கவில்லை என்று கூறினார். ஜப்பானை விடவும் இலங்கை விவகாரத்தில் அதிகம் பரிச்சயமுள்ள நாடு இந்தியா. சில தவறுகள் நேர்ந்தபோதும் இலங்கை விடயத்தில் அது அக்கறையுடனேயே இருந்துவருகின்றது. எனவே ஒரு தகுந்த ஆலோசனையாகவே இந்தியா அந்தக் கருத்தை எமக்குத் தெரிவித்தது என்று அகாஷி மேலும் சொன்னார். (ம)

## குருகுல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் நிர்வகிக்கப்படும். குருக்கள்மார் முறையாகக் கற்பதற்கான சகல வசதிகளோடு வேதாகம சைவ சித்தாந்த துறையில் அறிவும் ஆற்றலும் பெற்ற விரிவுரையாளர்கள் கல்வி ஊட்டவுள்ளனர். இக்கல்லூரியின் அதிபராக சகல தகுதிகளையும் உடைய ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். இங்கு கணனி வசதிகள் மற்றும் விரிவுரைகளுக்கு ஏற்ற சாதனங்கள் ஏனைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்லூரியில் பயிற்சி பெறுபவர்கள் ஈழத்திலுள்ள சிவாலயங்களில் சிவாச்சாரியார்களாகப் பணிபுரிவதற்கு அமர்த்தப்படுவார்கள் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முதலான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்பை பேணுவதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையே முன்னிலையில் நிற்பதாக பிரிட்டிஷ் குழுவிடம் தமிழ்ச்செல்வன் சுட்டிக் காட்டினார்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டியது அவசியம்.

மக்கள் சமாதானத்தின் பயனை அனுபவிப்பதற்கு அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். அபிவிருத்திப் பணிகளே, மக்கள் மனங்களில் சமாதானத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு பிரிட்டிஷ் குழுவினர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இங்கு அரச அதிபர் உட்பட முக்கிய அதிகாரிகளை இன்று சந்தித்துப் பேசவுள்ள அவர்கள் இன்றே கொழும்பு திரும்புவார்கள். (ம-12)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இக்குழுவினர் குடாநாட்டில் அரசுப் பிரதிநிதிகளையோ, அன்றி அரசுசார்பு அமைப்புகளின் பிரதிநிதிகளையோ சந்திக்க மாட்டார்கள் என்றும் எதிர்க்கட்சி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து யுத்தம் நின்று போன பிறகு எதிர்க்கட்சியின் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது இது முதல்முறையாகும். (ஐ)

## ஜனாதிபதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரமும் அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவார் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை என்பன குறித்தும் ஜனாதிபதி - மகேஸ்வரன் பேச்சில் ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது. (ஐ)


A/L கணக்கீடு 2005
திரு. பாலவாசன் B.B.A (F.M.Spl.)
Sat., Sun. 9.00-10.00 a.m.
விக்னா கல்வி நிறுவனம்.
Note:-கணக்கீட்டிற்கான தனியான அனுமதி வழங்கப்படும். (13352)

எமது புதிய வீடியோ cd வெளியீடு
✧ ராமச்சந்திரா
✧ காவோட்படை
வீடியோ விமல் யாழ்ப்பாணம். (13425)

WANTED
ELIGIBLE SUB - CONTRACTOR TO EXECUTE A9 ROAD CONSTRUCTION.
APPLY BEFORE 23rd JANUARY 2003.
AD.NO.1753
C/O UTHAYAN (13300)

தவறிவிட்டது!
அந்திரான், கரணவாய் மேற்கு, கரவெட்டி அ. வரதராஜா (குணம்) என்பவருடைய கையில் வைத்திருந்த பை 'சுவிஸ்' நாட்டு பணத்துடன் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் சந்நிதி கோவில் காரியாலயத்தில அல்லது இ.ரகுராமன் தொலைத்தொடர்பு, கரணவாய் தெற்கு என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (c/26147)

ரோணியோ வேலைகள்
Computer Type Setting, ரோணயோ வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு- தயா
இல. 12, 2ஆவது ஒழுங்கை
பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
T.P. - 077 - 7274462 (13367)

புதுக்கடை திறப்பு விழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைமாதம் 05ஆம் நாள் (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணி தொடக்கம் 11.05 மணி வரையுள்ள சுபவேளையில்
எம்மால் புதிதாக
நியூ அனிதா நகை மாடம்
என்னும் புதிய தங்கநகை வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளதால் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்
திரு.ச.கோகுலசிறி (சிறி)
213 D, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (13430)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகலிங்கம் கமலாம்பிகைஅம்மா

(முகமாலை)

முகமாலையைப் பிறப்பிடமாகவும், இல. 158, பொற்பதி வீதி, கோண்டாவில கிழக்கு, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகலிங்கம் கமலாம்பிகைஅம்மா அவர்கள் நேற்று (18.01.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் க.கனகலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர், யாழ்.மாநகர சபை) அவர்களின் அன்பு மனைவியும் சோமசேகரம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி தி.சோமகலா (ஆசிரியர், யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை), சந்திரசேகரம், திருமதி ஜே.கோமதி, குணசேகரன், தர்மசேகரம் (3ஆம் ஆண்டு மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இ.திருஞானமூர்த்தி (வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை), ம.ஜெகதீஸ்வரன், திருமதி கோ.வளர்மதி (ஆசிரியர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), திருமதி ச.பிரேமிளா, திருமதி கு.சந்திரா ஆகியோரின் மாமியாரும், பவித்திரன், கலாரூபன், திவ்யா, நர்மதா, அபிஷா, மயூரன், மதுசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

158, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (13436)

தகவல்:
க.சோமசேகரம்
(மகன்)


யாழ் நகரில் காவேரி சில்க்ஸின் மாபெரும் தள்ளுபடி விற்பனை
15 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு 2003 தை 19ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் அனைத்து ஆடை வகைகளையும் பெற்றுக்கொள்ள எமது கிளை ஸ்தாபனத்தை நாடுங்கள்:
இன்றுமுதல்
காவேரி மலிவு விற்பனை அகம் (4627)
77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.